# உதயன்

சுடர் : 36 | கதிர் : 256 | புதன்கிழமை | ஆடி 26 ஆம் நாள் 11 ஒகஸ்ட் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 24 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111



## இலங்கையில் நாம் தினமும் 30 இலட்சம் ரீலோட் காட்களை பயன்படுத்துகின்றோம்

நாம் பல ஆண்டுகளாக வீசியெறியும் பணம்.



▶ 02 ஆம் பக்கம்





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

airtel 4G

ரீலோட் பிடியிலிருந்து விடுபடுங்கள்



SWITCH TO
AIRTEL FREEDOM PACKS

மாதத்திற்கு 1 — ஒரு Reload
ANY TIME 24h — 4G Data
Unlimited அழைப்பு நேரம்

| PRICE | VALIDITY | 4G DATA | AIRTEL CALLS | OTHER NETWORK MINUTES | EXCESS USAGE RATE |
|---|---|---|---|---|---|
| Rs. 999 | 30 DAYS | 2GB Per Day (60GB Per Month) | UNLIMITED | 300 | 50 CENTS TAX/MIN |
| Rs. 599 | | 1GB Per Day (30GB Per Month) | | 300 | |
| Rs. 399 | | 500MB Per Day (15GB Per Month) | | 200 | |
| Rs. 199 | | 1GB Per Month | | 100 | |

Work From Home மற்றும் Social Media தளங்களுக்கு செல்லலாம்

Get 50 Local SMS to any network with all these packs.
www.airtel.lk

TRC/AIR/PRO/21/05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

சுடர் : 36 கதிர் : 256 | புதன்கிழமை | ஆடி 26 ஆம் நாள் 11 ஓகஸ்ட் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 24 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111


# மாகாணப் பயணக்கட்டுப்பாடு இறுக்கமாகக் கண்காணிப்பு!

### சவேந்திர சில்வா தெரிவிப்பு

**கொழும்பு, ஓக. 11**

**நாடு முடக்கப்படுவது குறித்து முடிவு எடுக்கப்படவில்லை. எனினும் மாகாணங்களுக்கு இடையேயான பயணக் கட்டுப்பாடு இன்று முதல் கடுமையாகக் கண்காணிக்கப்படும் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.**

17 ▶



## பால்மா மீதான வரிகள் நீக்கம்

*தட்டுப்பாட்டையடுத்து அரசு நடவடிக்கை*

கொழும்பு, ஓக. 11

இறக்குமதி செய்யப்படும் பால்மா மீது விதிக்கப்பட்டிருந்த வரி முழுமையாக நீக்கப்பட்டிருப்பதாக அமைச்சரவை

17 ▶

## கடலுக்கு சென்றவர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஓக. 11

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை உதயபுரம் கடற்கரைப்பகுதியில் நேற்றுக் காலை சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

17 ▶

## கொரோனா 3,223

கொழும்பு, ஓக. 11

இலங்கையில் மேலும் 3 ஆயிரத்து 223 பேருக்கு கொரோனாத் தொற்றுள்ளமை

17 ▶

## மயங்கி விழுந்த கர்ப்பிணி இறப்பு

*பரிசோதனையில் கொவிட் உறுதி*

யாழ்ப்பாணம், ஓக. 11

கர்ப்பிணிப் பெண்ணொருவர் மயங்கி வீழ்ந்து உயிரிழந்த நிலையில், அவருக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் கொரோனாத் தொற்று

12 ▶

## குளவி கொட்டி முதியவர் இறப்பு!

*பி.சி.ஆரில் அவருக்கு கொரோனா*

கிளிநொச்சி, ஓக. 11

கிளிநொச்சி மருத்துவமனையில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி சிகிச்சை பெற்றுவந்தவர், சிகிச்சை பய

12 ▶

## நல்லூர்க் கந்தனை தரிசிக்க தடுப்பூசி அட்டை கட்டாயம்

*யாழ். மாநகர சபை அறிவிப்பு*

யாழ்ப்பாணம், ஓக. 11

நல்லூர்க் கந்தனின் உற்சவத்துக்கு வருபவர்கள் தடுப்பூசி போடப்பட்ட அட்டைகளை வைத்திருப்பது அவசி

12 ▶

## ஜெனிவாத் தொடர் குறித்து கொழும்பு கழுகுப்பார்வை!

கொழும்பு, ஓக. 11

ஜெனிவாவில் எதிர்வரும் செப்ரெம்பரில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடர் குறித்து

17 ▶

## கடைசி அஸ்திரமே ஊரடங்கு உத்தரவு

*அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு*

கொழும்பு, ஓக. 11

கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்கான கடைசி முயற்சியாக மட்டுமே ஊரடங்கு உத்தரவு தொடர்பில் தீர்மானிக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர்

17 ▶

## ஐ.நாவில் அரசை பிணையெடுப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சி!

*சுமந்திரன் பீரிஸ் இரகசியப் பேச்சின் பின்னணி இதுவே என்கிறார் சுரேஸ்*

யாழ்ப்பாணம், ஓக. 11

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுடன் மேற்கொள்ளப் போகின்ற பேச்சு என்பது ராஜபக்ச அரசை மீண்டும் ஐ.நா.வின் பிடியிலிருந்து பிணை எடுக்கும் முயற்சிபோல்

17 ▶

## 4 வாரங்களுக்காவது முழுமையான ஊரடங்கு!

*சுகாதாரத்துறை அரசிடம் கோரிக்கை*

கொழும்பு, ஓக. 11

இலங்கையில் வேகமாகப் பரவி வரும் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்குக் குறைந்தபட்சம் நான்கு வாரங்களுக்குத் தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு

12 ▶

## சுகாதாரத் தரப்பின் பரிந்துரைக்கமைய முடக்கம் குறித்து தீர்மானிக்கப்படும்!

**அரசு அறிவிப்பு**

கொழும்பு, ஓக. 11

பயணக்கட்டுப்பாட்டுக்கான பரிந்துரை உட்பட சுகாதாரத் தரப்பால் முன்வைக்கப்படும் பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கு அரசு தயாராகவே இருக்கின்றது. சுகாதாரத் தரப்பின் பரிந்துரை கிடைத்ததும் அனைத்துக் காரணிகள் தொடர்பிலும் ஆராய்ந்து உரிய முடிவு எடுக்கப்படும் என்று அமைச்சரவை இணைப் பேச்சாளரும், அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார். அமைச்சரவை முடிவுகளை அறி

17 ▶





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை முடக்குவது பற்றி இவ்வாரம் இறுதி முடிவு!!

## எந்தவொரு தகவலையும் மறைக்கவில்லை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிவிப்பு

கொழும்பு, ஓக. 11

**நாட்டை முழுமையாக முடக்குவது தொடர்பான யோசனை எமது தரப்பில் இருந்து இன்னும் முன்வைக்கப்படவில்லை. எனினும், இவ்வாரம் நடைபெறும் சம்பவங்களை அடிப்படையாகக்கொண்டே இறுதி முடிவெடுக்கப்படும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்தார்.**

நாட்டில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும் இறப்பு விகிதம் நாளாந்தம் அதிகரித்துவருகின்றது. எனவே, நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக நாட்டை முடக்கும் யோசனையை துறைசார் பொறுப்பாளர் என்ற வகையில் முன்வைத்துள்ளீர்களா என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டை முடக்குவதற்கான யோசனையை, ஜனாதிபதி செயலணியிடம் நான் இன்னும் முன்வைக்கவில்லை. செயலணிக்கூட்டம் இவ்வாரமும் ஜனாதிபதி தலைமையில் நடைபெறும். இக்காலப்பகுதிக்குள் இடம்பெறும் சம்பவங்கள் தொடர்பில் ஆராயப்பட்டு, உரிய வகையில் சரியான தீர்மானங்கள் எடுக்கப்படும். நாட்டை முடக்குவ தென்பது இறுதியான தெரிவாகவே அமையும். அதற்கு முன்னர் சில நடைமுறைகளை, விடயங்களை செய்தாக வேண்டும். கடந்த காலங்களிலும் நாம் பொது முடக்கத்துக்கு சென்றிருந்தோம். நாட்டை முடக்குமாறு வலியுறுத்துபவர்களும் இருக்கின்றனர், அதேபோல அவ்வாறு செய்ய வேண்டாம் என குறிப்பிடுபவர்க ளும் உள்ளனர். எனவே, இரு தரப்பு கோரிக்கை உட்பட பல விடயங்கள் ஆராயப்படும். சுகாதார அமைச்சின் விஞ்ஞான தொற்று நோய் பிரிவின் தகவல், தரவுகளும் உள்வாங்கப்பட்ட பின்னரே தீர்மானம் எடுக்கப்படும்.

நாடு முடக்கப்படுமா அல்லது கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்படுமா என்பது உள்ளிட்ட விவரம் இவ்வாரத்துக்குள் அறிவிக்கப்படும். நிலைமை தற்போது ஆராயப்பட்டுவருகின்றது. செயலணிக் கூட்டத்தில் எனது பரிந்துரையும் முன்வைக்கப்படும். அதேபோல சுகாதார அமைச்சால் வெளியிடப்படும் தகவல்கள் உண்மையானவை. எதையும் மறைக்க வேண்டிய தேவை எமக்கு கிடையாது. தகவல்கள் முறையாக வெளியிடப்படுவதில்லை என்பது முன்பிருந்தே முன்வைக்கப்படும் குற்றச்சாட்டாகும். தகவல்களை மறைக்க வேண்டிய அவசியம் எமக்கு கிடையாது, - என்றார். (ஒ,44)

## பேர்ள் கப்பல் விபத்து: மீனவர்களுக்கு நஷ்டஈடு

கொழும்பு,ஓக.11

கொழும்பு துறைமுகத்துக்கு அண்மையில் தீப்பற்றிய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால், பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நஷ்டஈட்டை வழங்குவதற்கு, குறித்த கப்பல் நிறுவனம் தயாராக உள்ளது என்று உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளது. கப்பல் நிறுவனம் சார்பாக நீதிமன்றில் முன்னிலையான சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா இதனைத் தெரிவித்தார்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தால் பாணந்துறையிலிருந்து நீர்கொழும்பு வரையிலான கடற்பரப்பில் மீன்பிடிக்க தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்தத் தீர்மானத்தால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு 5 லட்ச ரூபா நஷ்டஈட்டை வழங்க அரசுக்கு உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு மீதான விசாரணையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

கப்பலுக்கு எதிராக பல வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முழுமையான நஷ்டஈட்டை வழங்குவது தொடர்பில் நீதிமன்ற உத்தரவு வரும் வரையில் பார்த்துக் கொண்டிருக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்தார். (ஒ,4)

## கொரோனாத் தொற்றால் மூன்று இடங்கள் முடக்கம்

சாவகச்சேரி,ஓக.11

கொரோனாத் தொற்றுக் காரணமாக சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினரால் மூன்று இடங்கள் நேற்று முடக்கப்பட்டுள்ளன.

வரணிப் பகுதியில் உள்ளபனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, வரணி சமுர்த்தி வங்கி மற்றும் கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சிற்றுண்டி நிலையம் ஆகியவையே இவ்வாறு முடக்கப்பட்டன.

நேற்று காலை மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் கொத்தணியில் பணியாற்றும் 7 பேர், சமுர்த்தி வங்கிக் கிளை முகாமையாளர் மற்றும் வங்கி அலுவலர் ஆகிய இருவர், சிற்றுண்டி நிலையத்தில் பணியாற்றும். ஒருவர் ஆகியோருக்கு தொற்று உறுதி. செய்யப்பட்டது. இதனையடுத்து மூன்று இடங்களும் முடக்கப்பட்டுள்ளன. (ஐ-9)

## வவுனியாவில் மருத்துவர்கள் உள்ளிட்ட 76 பேருக்கு தொற்று

வவுனியா,ஓக.11

வவுனியா மருத்துவமனையில் கடமையாற்றும் மருத்துவர்கள் உள்ளிட்ட 76 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு மற்றும் செட்டிகுளம் உள்ளிட்ட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ளோரிடம் பி.சி.ஆர் பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டிருந்தன.

பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் வவுனியா மருத்துவமனையில் கடமையாற்றும் மருத்துவர்கள் இருவர் மற்றும் இராணுவத்தினர் உள்ளிட்ட 76 பேருக்கு கொரோனாத் தொற்று இருப்பது நேற்று உறுதிசெய்யப்பட்டது.

இதேவேளை அவர்களுடன் தொடர்புகளை பேணியவர்கள் தனிமைப்படுத்தப்பட்டதுடன், தொற்று உறுதியானவர்களை கொரோனா மருத்துவமனைக்கு அனுப்பும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-110,18)

## க.பொ.த.சாதரண தரப் பரீட்சை பெறுபேறுகள் மீண்டும் தாமதம்

கொழும்பு,ஓக.11

2020 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்படலாம் என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு 6 லட்சத்து 22 ஆயிரம் மாணவர்கள் இம்முறை தோற்றியிருந்தனர்.

அவர்களில் ஒரு லட்சத்து 69 ஆயிரம் பேர் அழகியல் கற்கைகளை தெரிவுசெய்துள்ளனர். அவர்களுக்கு செயன்முறை பரீட்சைகள் நடத்தப்பட வேண்டியுள்ளன. தற்போது அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும் அந்தச் செயற்பாடுகளில் இருந்தும் ஆசிரியர் தொழிற்சங்கங்கள் விலகியுள்ளன. இதன் காரணமாக, கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ,4)




## யாழ்.மாநகர முதல்வருக்கு எதிராக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடும் இரு உறுப்பினர்கள்

யாழ்ப்பாணம்,ஓக.11

யாழ்ப்பாண மாநகர முதல்வர் மணிவண்ணனுக்கு எதிராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மாநகரசபை உறுப்பினர்கள் இருவர் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். ரஜீவ்காந் மற்றும் கிருபாகரன் ஆகிய இருவருமே மாநகரசபையின் நுழைவாயில் முன்பாக நேற்றுக் காலை முதல் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

சபையின் உறுப்பினரான ரஜீவ்காந்தின் வட்டார அபிவிருத்தி நிதியை அரசியல் பழிவாங்கல் காரணமாக நிறுத்தி வைத்திருக்கும் முதல்வரின் அராஜக செயற்பாட்டை கண்டித்து இந்த உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

முதல்வர் திட்டமிட்ட வகையில் அரசியல் பழிவாங்கல் செயற்பாடுகளில் ஈடுபடுவது தொடர்பில் தாம் உள்ளூராட்சி ஆணையாளர் உள்ளிட்ட பல தரப்பினரிடமும் முறையிட்டு உள்ளோம் என்றும் இதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். தமக்கான உரிய தீர்வு விரைந்து கிடைக்காத விடத்து தொடர் போராட்டத்தில் ஈடுபட போகிறோம் எனவும் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# கெடுகுடி சொற்கேளாது

கொரோனா பரவலின் தீவிரத்தன்மை தொடர்பில் வெளிவரும் தகவல்கள் மக்களை பதைபதைப்புக்குள்ளாக்கின்றன. ஆனாலும் அவற்றை வெறும் தகவல்களாக காதில் வாங்கிக் கொண்டு தமது அன்றாடப் பணிகளில் மூழ்க்கிக் கிடக்கின்றார்கள். அவர்களை நாட்டின் வாழ்க்கைச் சுமை அவ்வாறு மாற்றிவிட்டது. நாட்டின் பொருளாதார நெருக்கடி இலங்கையை அகழிக்குள் புதைத்துவிட்டது. அதிலிருந்து மீள முடியாமல் நாடு சிக்கித் தவித்துக் கொண்டிருக்கின்றது. வாராந்தம் ஏறிச் செல்லும் வாழ்க்கைச் செலவுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மக்கள் அல்லாடுகின்றனர். இலங்கை சனத்தொகையின் அரைவாசிக்கும் அதிகமானோர் நடுத்தரவர்க்கத்தினர். தற்போதைய விலைவாசியால் பெரிதும் அடிவாங்குபவர்கள் அவர்கள்தான். இந்த நிலையில்தான் கொரோனாவின் தீவிரத்தால் பயம் இருந்தாலும், வாழ்வதற்கான உழைப்பை கைவிட முடியாத சூழலில் அதை நோக்கி ஓடிக் கொண்டிருக்கின்றார்கள்.

இவ்வாறானதொரு இக்கட்டான நிலைமையே இலங்கையில் நிலவுகின்றது.

அவசிய தேவைகள் இல்லாமல் வீடுகளை விட்டு வெளியே வரவேண்டாம் என்று சுகாதார அதிகாரிகள், மருத்துவர்கள், இராணுவத்தளபதி உள்ளிட்ட எல்லோரும் திரும்பத் திரும்பச் சொல்கின்றனர். ஆனால் நாட்டை முடக்காமல், பணிக்கு அழைக்கின்றார்கள். இத்தகைய முரண் நிலைகள் நாட்டை மேலும் மேலும் அழிவுக்கு அழைத்துச் செல்கின்றன. டெல்டா வைரஸ் தீவிரத்தால் இந்தியாவில் பல லட்சம் பேர் செத்து மடிந்தார்கள். அந்த நிலைமையை இலங்கை அண்மித்து விட்டது. இலங்கையின் மருத்துவக் கட்டமைப்பும் சரிந்துவிட்டது. மருத்துவர்கள், தாதியர்கள் என்று சுகாதாரத் துறை முழுமையாகவே கடந்த ஒன்றரை ஆண்டுகளாக கொரோனாவுக்கு எதிராகப் போராடி சோர்ந்துவிட்டது. அதற்கு மேலாக தற்போது டெல்டாவின் தீவிரம் அவர்களையும் ஆட்டிப்படைக்கின்றது. அதிகளவான மருத்துவர்களும், தாதியர்களும் தொற்றுக்குள்ளாகியிருக்கின்றனர். இதன் காரணமாக கொரோனா நோயாளிகளை மாத்திரமின்றி ஏனைய நோயாளிகளையும் கவனிக்க முடியாத இக்கட்டு நிலைமைக்கு இலங்கையின் மருத்துவத்துறை தள்ளப்பட்டுள்ளது.

பொதுச் சுகாதாரத்துறையும் அதே நிலைமையில்தான் இருக்கின்றது. தொற்றாளர்களை அடையாளம் காண்பது, அவர்களுடன் தொடர்புடைய முதல் நிலைத் தொற்றாளர்களைத் தனிமைப்படுத்துவது, தடுப்பூசி ஏற்றும் வேலைத் திட்டத்தை முன்னெடுப்பது என்று திரும்பிய பக்கம் எல்லாம் அவர்களின் தேவைகளும் அதிகரித்து விட்டது.


நாட்டின் நிலைமை இவ்வாறு மோசமான பக்கத்தை அடைந்து கொண்டிருக்கையில் அரசு, வழமைபோன்று எதேச்சதிகாரமாகவே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. நாட்டை முடக்க மாட்டோம் என்று வீம்புக்கு கதையளந்து கொண்டிருக்கின்றது.

கடந்த ஏப்ரல் மாதத்தில் நாட்டை முடக்குமாறு திரும்பத் திரும்பக் கோரியபோது பேசாமல் இருந்து விட்டு, நிலைமை கைமீறிய பின்னர் மே மாத இறுதியிலிருந்து ஒரு மாதம் நாட்டை முடக்கியது. அது வெள்ளம் வந்த பின்னர் அணை கட்டிய நிலைமைதான். இப்போதும் அதேபாணியில்தான் நகருகின்றது ராஜபக்ச அரசு.

தற்போது கூட நாட்டை முடக்கினாலும் அதுவும் காலம் பிந்திய நடவடிக்கையே.

களயதார்த்தம் இவ்வாறு இருக்கும் நிலையில், சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ நிபுணர் அசேல குணவர்தன, "இந்தியா மற்றும் இந்தோனேசியா நிலைவரத்தை இலங்கையுடன் ஒப்பிட முடியாது. சுகாதாரக் கட்டமைப்பு, சமூகக் காரணி உள்ளிட்ட விடயங்கள் வேறுபட்ட விதத்திலேயே காணப்படுகின்றன. தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது இறப்பு வீதமும் அதிகரிக்கின்றது. இந்தியா, இந்தோனேசியா போன்ற நாடுகளிலும் இப்படிதான் நடந்தது. எனினும், எடுத்த எடுப்பிலேயே பிற நாடுகளுடன் எமது நாட்டு நிலைவரத்தை ஒப்பிடமுடியாது. பூகோளம், சனத்தொகை, சுகாதார கட்டமைப்பு உள்ளிட்ட விடயங்கள் வேறுபடுகின்றன. எமது நாட்டில் பலமான சுகாதார கட்டமைப்பு உள்ளது. மேற்படி நாடுகளைவிட வைரஸை தடுக்க சில நடவடிக்கைகளை எம்மால் எடுக்க முடியும் " என்று கூறியிருக்கின்றார்.

நாட்டின் நிலைமையைத் தெரிந்து கூறுகின்றாரா அல்லது கோமாவில் இருந்து கொண்டு உளறுகின்றாரா என்பது தெரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம், 'கெடுகுடி சொற்கேளாது'



# தடுப்பூசி ஏற்றிய 193 பேரை காவு வாங்கியது கொரோனா

**கொழும்பு, ஓக. 11**

**கொரோனாத் தடுப்புக்கான 2 தடுப்பூசிகளை பெற்றுக்கொண்டவர்களில் 23 பேரும், ஒரு டோஸை பெற்றுக்கொண்டவர்களில் 176 பேரும் இதுவரை கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவர் அசேல குணவர்தன தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனாத் தொற்றால் 60 வயதுக்கு மேற்பட்டவர்களே அதிகளவில் உயிரிழக்கின்றனர். அவர்களிலும் தடுப்பூசி பெறாதவர்களே உயிரிழக்கும் வாய்ப்பு அதிகம் உள்ளது. தடுப்பூசி ஏற்றலின்போது 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு நாம் முன்னுரிமை வழங்கியிருந்தோம். எனினும், சிலர் இன்னமும் தடுப்பூசி பெறாமல் உள்ளனர். அவ்வாறானவர்கள் உடன் தடுப்பூசி பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கின்றேன்.

தடுப்பூசி ஏற்றியவர்களில் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை மிகக்குறைவு என்றே குறிப்பிடவேண்டும். 2 தடுப்பூசிகளையும் ஏற்றியவர்களில் 23 பேரும், ஒரு தடுப்பூசி ஏற்றியவர்களில் 176 பேருமே கொரோனாவால் உயிரிழந்துள்ளனர். தடுப்பூசிதான் இறுதி தீர்வு என குறிப்பிடவில்லை. ஆனால் தடுப்பூசி ஏற்றிக்கொண்டால் உயிர் பாதுகாப்பு உள்ளிட்டவற்றை உறுதிப்படுத்திக் கொள்ளலாம். அதேவேளை, இந்தியா மற்றும் இந்தோனேசியா நிலைவரத்தை இலங்கையுடன் ஒப்பிட முடியாது. சுகாதாரக் கட்டமைப்பு, சமூகக்காரணி உள்ளிட்ட விடயங்கள் வேறுபட்ட விதத்திலேயே காணப்படுகின்றன. டெல்டா திரிபால் தொற்று வேகமாக பரவிவருகின்றது. அல்பாவைவிடவும் அதிதீவிரமாக டெல்டா பரவிவருகின்றது. இலகுவில் தொற்றக்கூடிய அபாயம் காணப்படுகின்றது. எனவே, இந்நிலைமையை உணர்ந்து மக்கள் உரிய வகையில் இறுக்கமாகவே சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது இறப்பு வீதமும் அதிகரிக்கின்றது. இந்தியா, இந்தோனேசியா போன்ற நாடுகளிலும் இப்படிதான் நடந்தது. எனினும், எடுத்த எடுப்பிலேயே பிற நாடுகளுடன் எமது நாட்டு நிலைவரத்தை ஒப்பிடமுடியாது. பூகோளம், சனத்தொகை, சுகாதார கட்டமைப்பு உள்ளிட்ட விடயங்கள் வேறுபடுகின்றன. எமது நாட்டில் பலமான சுகாதார கட்டமைப்பு உள்ளது. மேற்படி நாடுகளைவிட வைரஸை தடுக்க சில நடவடிக்கைகளை எம்மால் எடுக்க முடியும்- என்றார். (ஒ.44)

# கொரோனாவால் இறப்பு: இலங்கையில் 10 மடங்கு

கொழும்பு,ஓக.11

இலங்கையின் கொரோனாவால் ஏற்படும் உயிரிழப்புக்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில், இந்தியாவில் ஏற்பட்ட உயிரிழப்புகளை விட, 10 மடங்கு அதிகம் என்று ராஜரட்ட பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட பேராசிரியர் சுனேத் அகம்போடி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது ருவிற்றர் பக்கப் பதிவில் தெரிவிக்கையில், இலங்கையில் நாளாந்தம் அடையாளம் காணப்படும் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை, இந்தியாவை விடவும் மூன்று மடங்கு அதிகம்.

அதேவேளை இலங்கையில் தற்போது ஏற்பட்டு வரும் கொரோனா உயிரிழப்புக்கள், இந்தியாவில் கொரோனா பரவல் உச்சத்தில் இருந்தபோது ஏற்பட்ட உயிரிழப்புக்களை விடவும் அதிகம்.- என்றார். (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத் தடைச்சட்டம்: வழக்குகள் முடிவுறுத்தப்படும்

## நீதியமைச்சர் எதிர்பார்ப்பு



**கொழும்பு, ஓக.11**

**பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட அல்லது நிலுவையில் உள்ள அனைத்து வழக்குகளும் இந்த ஆண்டு இறுதிக்குள் முடிவுறுத்தப்படும் என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், 2016 ஆம் ஆண்டுக்கு முன்பிலிருந்து நிலுவையில் உள்ள அல்லது தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் இந்த ஆண்டு இறுதிக்குள் முடிக்கப்பட வேண்டும் என்று பிரதம நீதியரசர் சுற்றறிக்கை அனுப்பியுள்ளார்.

அதற்கமைவாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்களுக்கு எதிராக விசாரணைகளை ஆரம்பிக்கவும், குற்றச்சாட்டுகள் இல்லை என்றால் அவர்களை விடுவிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இருப்பினும் குறிப்பிட்ட வழக்குகள் குறித்து தனிப்பட்ட முறையில் கருத்துக் கூற முடியாது. பயங்கரவாத தடைச் சட்டத்தின் சில சரத்துக்களைத் திருத்தும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. -என்றார். (ஒ.4)

# ரஷ்ய சுற்றுலாவிகள் இலங்கைக்கு வருகை

கொழும்பு,ஓக.11

இலங்கையில் கொரோனாத் தொற்று தீவிரமடைந்துள்ள நிலையில், சுற்றுலா உயிர்க் குமிழி என்ற நடைமுறையின் கீழ் 44 ரஷ்ய சுற்றுலாப் பயணிகள் இலங்கையை வந்தடைந்துள்ளனர்.

இந்தத் தகவலை ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தனது முகநூலில் பதிவிட்டுள்ளார்.

ரஷ்யாவின் மொஸ்கோவிலிருந்து இரண்டாவது விமானம் 44 பயணிகளுடன் நேற்றுக் காலை 06.10 மணிக்கு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளது.

எனவே சுற்றுலாப் பயணிகளை தொந்தரவு செய்யாத வகையில் சுகாதாரப் பரிந்துரைகளை அரசு எளிதாக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)

# முடக்கமே ஓரே தீர்வு

## மருத்துவ நிபுணர்கள் விடாப்பிடி

கொழும்பு,ஓக.11

இலங்கையில் கொரோனாத் தொற்று மிகவும் மோசமாக உள்ளது. எனவே மக்களின் நடமாட்டத்தைக் குறைப்பதற்கு, நாட்டை முழுமையாக முடக்க வேண்டும் என்று விசேட மருத்துவ நிபுணர்களின் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் தலைவர் மருத்துவர் லக்குமார் பெர்னாண்டோ தெரிவிக்கையில், நாடு முழுவதும் டெல்டா மாறுபாடு அதிகமாகவுள்ளது. அனைத்து சுகாதாரப் பிரிவுகளும் அதிகபட்ச செயற்றிறனை எட்டியுள்ளன. நோயாளிகளின் எண்ணிக்கையும், கவலைக்கிடமாக உள்ளது. ஒட்சிசன் சார்ந்த நோயாளிகளின் எண்ணிக்கையில் தினசரி அதிவேக உயர்வு உள்ளது.

படுக்கைகள் நிரம்பியுள்ளன. ஒட்சிசன் தேவையும் அதிகரித்துவரும் நிலையில், பேரழிவு அளவுகளை அடைய சில நாள்கள் ஆகும். இது மன நிறைவுக்கான நேரம் இல்லை. எனவே மிகவும் கடுமையான கட்டுப்பாடுகள் விரைவில் விதிக்கப்பட வேண்டும். -என்றார். (ஒ.4)

# போராடும் தலைவர்களை சிறையிலடைக்க முயற்சி

## தொழிற்சங்கங்கள் குற்றச்சாட்டு



கொழும்பு,ஓக.11

அரசுக்கு எதிராக போராடும் தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புகளின் முன்னணித் தலைவர்களை சிறையில் அடைக்க இலங்கை அரசு திட்டமிட்டுள்ளது என்று அரச மற்றும் தனியார் துறைகளின் பல முன்னணி தொழிற்சங்கங்கள் குற்றம் சாட்டியுள்ளன.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கடந்த 3 ஆம் திகதி நாடாளுமன்றுக்கு அருகில் நடந்த போராட்டத்தில் ஈடுபட்ட பல தலைவர்கள் ஏற்கனவே சட்டவிரோதமாக பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அழைப்பாளர், ஜயவர்தனபுர பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் தலைவர் ஆகியோர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தின் தலைவருக்கும் பொலிஸாரின் ஒடுக்குமுறை இடம்பெற்று வருகின்றது.


ஆசிரியர்களின் வேலைநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்குப் பதிலாக், போராட்டக்காரர்களைக் கைதுசெய்கின்றனர்.

தொழிற்சங்கங்கள், சிவில் சமூக அமைப்புகள், கலைஞர்கள் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உட்பட பொதுமக்கள் ஏற்கனவே அரசின் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு எதிராக கடுமையாக போராடி வருகின்றனர்,

கல்வியை இராணுவ மயமாக்கும் முயற்சி உட்பட தொழிற்சங்கத் தலைவர்கள் மற்றும் சிவில் சமூக ஆர்வலர்கள் உட்பட பலரைக் கைதுசெய்ய அரசு திட்டமிட்டுள்ளது.

அரசின் இந்தச் செயல்முறை கருத்துச் சுதந்திரத்துக்கான ஜனநாயக உரிமைகளுக்கு விழுந்த ஒரு அபாயகரமான அடி. கொரோனாத் தொற்றுக்கு மத்தியில் போராட்டங்களில் ஈடுபடும் மக்கள் மீதான அரசின் அடக்குமுறையைக் கண்டிக்கின்றோம். -என்றுள்ளது. (ஒ.4)

# அரசின் புள்ளி விவரங்கள் தவறு: சமூகத்தில் பலருக்கு கொரோனா



கொழும்பு,ஓக.11

கொரோனாத் தொற்றுத் தொடர்பில், நாட்டில் தற்போதுஅறிவிக்கப்படும் புள்ளி விவரங்கள் தவறானது. சமூகத்தில் லட்சக்கணக்கானோருக்கு கொரோனாத் தொற்று பரவியுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அரசு தற்போது வெளியிடும் கொரோனா இறப்புக்கள் தொடர்பான புள்ளிவிவரங்களில் எவ்வித நம்பிக்கையும் இல்லை. இதனை விசேட மருத்துவ நிபுணர்களும் தெரிவித்துள்ளனர்.

உண்மையான புள்ளிவிவரங்களை வெளியிடுவது எதிர்காலத்தில் ஆட்சிக்கு வரும் அரசின் கடமை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)

# துறைமுகங்களை விற்ற பின்னர் மக்களுக்கு பதுங்கு குழியே தஞ்சம்

**நாட்டின் வளங்களை விற்பனை செய்வதற்கு, மக்கள் இந்த அரசுக்கு அதிகாரத்தை வழங்கவில்லை.**

**துறைமுகங்களை வெளிநாடுகளுக்கு விற்ற பின்னர், நாட்டு மக்கள் ஒழிந்துக் கொள்ள பதுங்கு குழியை அமைக்க வேண்டிய நிலைமை ஏற்படும்.**

கொழும்பு.ஓக.11

இலங்கையில் பெறுமதியான துறைமுகங்களை வெளிநாடுகளுக்கு விற்ற பின்னர், நாட்டு மக்கள் ஒழிந்து கொள்ள பதுங்கு குழியை அமைக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என்று ஊழல் எதிர்ப்பு குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், திருகோணமலை துறைமுகம், எண்ணெய் தாங்கிகள் மற்றும் 33 ஏக்கர் காணியை அமெரிக்காவுக்கு குத்தகைக்கு வழங்குவது தொடர்பில் அமைச்சர் உதய கம்மன்பில அமைச்சரவை பத்திரம் தாக்கல் செய்துள்ளார்.

ஹம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவுக்கு குத்தகைக்கு கொடுக்கப்பட்டது. அதனை முதலீடு என்று கூறினர். அதனை முதலீடு என்று கருத விரும்பாத தற்போதைய அரசு திருகோணமலை துறைமுகத்தை அமெரிக்காவுக்கு குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இதனைத் தவிர கெரவலப்பிட்டிய எல்.என்.ஜி மின் உற்பத்தி நிலைய திட்டத்தில் 40 வீத பங்கை அமெரிக்காவுக்கு வழங்கத் தீர்மானித்தனர்.

இவ்வாறு நாட்டின் வளங்களை விற்பனைசெய்வதற்கு, மக்கள் இந்த அரசுக்கு அதிகாரத்தை வழங்கவில்லை.

ஹம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவுக்கும், திருகோணமலை துறைமுகம் அமெரிக்காவுக்கும், கொழும்பு துறைமுகம் இந்தியாவுக்கும் வழங்கப்பட்ட பின்னர், நாட்டு மக்கள் ஒழிந்துகொள்ள பதுங்கு குழியை அமைக்க வேண்டியதை மாத்திரமே செய்யநேரிடும். -என்றார். (ஒ.4)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தடுப்பூசி வழங்கலில் இலங்கை முன்னிலை

## 11 மில்லியன் பேருக்கு தடுப்பூசி

**கொழும்பு,ஓக.11**

**கொரோனாத் தடுப்பூசி வழங்கும் திட்டத்தில் இலங்கை முன்னிலையில் உள்ளது. இதுவரை 11 மில்லியனுக்கும் அதிகமானோருக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.**




இலங்கையில் 30 வயதுக்கு மேற்பட்ட மொத்த மக்கள் தொகையில் 96 வீதத்துக்கும் அதிகமானோர் குறைந்த பட்சம் கொரோனாத் தடுப்பூசியின் முதல் டோஸைப் பெற்றுள்ளனர்.

அதேவேளை 30 வயதுக்கு மேற்பட்ட மக்கள் தொகையில் 26 வீதத்துக்கும் அதிகமானோர் 2 ஆவது டோஸைப் பெற்றுள்ளனர்.

இலங்கையில் கிட்டத்தட்ட 3 மில்லியன் மக்களுக்கு தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.4)

# குடிதண்ணீர் திட்டத்துக்கான 12 கோடி ரூபா நிதி வீணடிப்பு

## மக்கள் ஏமாற்றம்

கொழும்பு,ஓக.11

குருநாகல் மாவட்டத்தில் பொல்பிதிகம தலாகொல கிராமத்தில் குடிதண்ணீருக்காக செலவிடப்பட்ட 12 கோடி ரூபா நிதி வீணடிக்கப்பட்டுள்ளது. அங்கு விநியோகிக்கப்படும் தண்ணீர் குடிப்பதற்கு பொருத்தமற்றது என்று பலர் விசனம் தெரிவித்துள்ளனர்.

தண்ணீரில் கசப்புத்தன்மை காணப்படுகின்றது என்று கூறும் சிலர் அதனைக் குடித்த பின்னர் வயிற்றெரிச்சல் மற்றும் நெஞ்செரிச்சல் உள்ளிட்ட ஒவ்வாமைகள் ஏற்படுகின்றன என்றும் தெரிவித்துள்ளனர்.

இந்தக் குடிதண்ணீர் திட்டம் அரச சார்பற்ற அமைப்பொன்றின் தலையீட்டால் நிர்மாணிக்கப்பட்டது. இதற்காக சுமார் 12 கோடி ரூபா நிதி செலவிடப்பட்டது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைச்சு மற்றும் அரச சார்பற்ற அமைப்புகள் சிலவும் ஒன்றிணைந்து 2018 ஆம் ஆண்டு முதல் இந்தத் திட்டத்தை மேற்கொண்டன.

ஏற்கனவே இலங்கைக் கடற்படையினரால், வெற்றிகரமான சுத்திகரிப்பு செயன்முறை மூலம் பிரதேச மக்களுக்கு இலவசமாக குடிதண்ணீர் விநியோகிக்கப்படுகின்றது.

எனினும் கோடிக்கணக்கில் நிதி செலவு செய்து தோல்வி காணும் ஓர் திட்டத்தை மேற்கொண்டமை பயனற்றது என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ஒ.4)

# அரசியல் கைதிகள் விவகாரம் நீதிமன்றங்களில் வேறுபாடு

## கைதிகளை விடுதலைசெய்வதற்கான அமைப்பு சுட்டிக்காட்டு

கொழும்பு,ஓக.11



அரசியல் கைதிகளின் விவகாரம் தொடர்பில், தெற்கில் செயற்படுகின்ற நீதிமன்றங்கள் ஒரு விதமாகவும், வடக்கு, கிழக்கில் செயற்படுகின்ற நீதிமன்றங்கள் இன்னொரு விதமாகவும் செயற்படுகின்றன என்று அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து அரசியல் கைதிகள் அரசியல் தீர்மானம் எடுத்து விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதிலேயே முனைப்பாக உள்ளோம்.

அதற்கமைவாக மக்கள் எழுச்சியோடு போராட்டம் நடத்துவது. ஐக்கிய நாடுகள் மற்றும் வெளிநாட்டு தூதரகங்களுக்கு கைதிகள் தொடர்பான விபரங்களைக் கையளிப்பது, பயங்கரவாத தடைச்சட்டத்தின் காரணமாக, மனித உரிமைகள் மீறப்பட்டன என்பது தொடர்பான ஆவணங்களைத் தயாரித்து அதனை உரியவர்களிடம் கையளிப்பது போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றோம்.

இலங்கையில் பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என்று சர்வதேசமும் அரசுக்கு அழுத்தங்களை கொடுத்து வருகின்றது.

அரசியல் கைதிகளுடைய விடுதலை என்பது, தமிழ் மக்களுடைய ஒரு கோரிக்கையாக மட்டுமல்ல, அது தெற்கில் இருக்கின்ற மக்களுடைய கோரிக்கையாகவும் அமைய வேண்டும்.

பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என்கின்ற குரல் தெற்கிலும் இடம்பெற வேண்டும். அரசியல் கைதிகள் எந்த விதமான நிபந்தனையுமின்றி விடுதலை செய்யப்பட வேண்டும்- என்றார். (ஒ.4,110)


# பால்மா விவகாரம் பஸிலிடம் கையளிப்பு

கொழும்பு,ஓக.11



உள்நாட்டு சந்தையில் தற்போது எழுந்துள்ள பால்மா பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு, நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவுக்கு அமைச்சரவை அதிகாரம் வழங்கியுள்ளது.

அதற்கமைவாக தற்போதைய பால்மாக இறக்குமதி வரி அல்லது பொதுமக்களுக்கு சுமையாக இல்லாத பிற நடவடிக்கைகளை திருத்துவதன் மூலம், உள்நாட்டுச் சந்தையில் விலையை அதிகரிக்காமல் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ளது. (ஒ.4)



# வவுனியா மாவட்டச் செயலகத்தில் கோவிட் தொடர்பான கூட்டம்

வவுனியா,ஓக.11

கொரோனாத் தொற்று தொடர்பான சிறப்புக் கூட்டம் வவுனியா மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் மாவட்ட பதில் செயலர் தி.திரேஷ்குமார் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் வவுனியா மாவட்டத்தின் தற்போதைய கொரோனா நிலைமை, அதனைக் கட்டுப்படுத்தல் மற்றும் அடுத்தகட்ட தடுப்பூசி ஏற்றுதல் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

இக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினரும் வவுனியா மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவருமான கு.திலீபன், வன்னி மாவட்ட கட்டளைத்தளபதி, வன்னி பிரதி பொலிஸ்மா அதிபர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிரதேச செயலர்கள் மற்றும் திணைக்கள அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-110)

# கொரோனா அச்சுறுத்தலை எதிர்கொள்ள அனைவரும் விழிப்புடன் செயற்படவும்

## வவுனியா பொது மருத்துவமனையின் பணிப்பாளர் தெரிவிப்பு

வவுனியா,ஓக.11

என்றும் இல்லாத வகையில் தொற்றாளர்கள் அதிகரிக்கும் மாவட்டமாக வவுனியா மாறி வருகின்ற நிலையில் மக்கள் மிகவும் விழிப்புணர்வுடனும் சமூகப் பொறுப்புடனும் செயற்பட வேண்டும் என்று வவுனியா பொது மருத்துவமனையின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து செல்கின்றது. இது எமது மாவட்டத்துக்கு பெரும் அச்சுறுத்தலாக மாறி வருவதால் பொது மக்கள் சுகாதார வழிமுறைகளை சீராக பின்பற்றுவதுடன் சமூக அக்கறையுடன் செயற்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

வவுனியா மருத்துவமனையில் வெளிநோயாளர் பிரிவுக்கு வருகை தரும் நோயாளர்களில் கணிசமானவர்களுக்கு கொரோனாத் தொற்று இருப்பது அடையாளம் காணப்பட்டுள்ளது. வவுனியா மருத்துவமனையின் கொரோனா விடுதி நோயாளர்களால் நிரம்பியுள்ள நிலையில், மேலும் ஓர் விடுதி கொரோனாத் தொற்றாளர்களுக்காக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. மேலும், சுகாதாரப் பணியாளர்களும் கொரோனாத் தொற்றுக்கு உட்படும்நிலை ஏற்பட்டுள்ளமையால் சுகாதார சேவைகளை வழங்குவதில் கடும் நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டி ஏற்படலாம்.

இவ்வாறான நிலைமைகளில், கொரோனாத் தொற்றாளர்கள் தவிர்ந்த ஏனைய நோயாளர்களின் சுகாதார தேவையை நிவர்த்திப்பதில் கடும் சிக்கல் நிலையை தோற்றுவிக்கும் வாய்ப்புள்ளது. என்றார். (ஐ110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாகபூசணி அம்மன் ஆலய சீரமைப்புக்கு நிதியுதவி

மன்னார்,ஓக.11

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலக பிரிவிலுள்ள சின்ன சன்னார் பகுதியில் உள்ள நாகபூசணி அம்மன் ஆலயத்தை சீரமைக்க மன்னார் அடைக்கலம் அறக்கட்டளையால் நிதியுதவி செய்யப்பட்டுள்ளது.

குறித்த நிதியை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் பிரத்தியேக செயலாளர் டானியல் வசந்த், ஆலய நிர்வாகத்தினரிடம் கையளித்தார். (ஐ-213)



மறவன்புலோ ஐயப்பன் ஆலயத்தில் புதிதாக குழாய்க் கிணறு ஒன்று சுவிஸ் நாட்டில் வசிக்கும் பரமநாதனர் கணேஸ்வரனின் நிதியுதவியில் அமைக்கப்பட்டுள்ளது.

இச்செயலை பாராட்டும் முகமாக ஆலய தர்மகர்த்தாவால் ப.கணேஸ்வரன் பொன்னாடை போர்த்தி அண்மையில் கௌரவிக்கப்பட்டார். (ஐ-159)



# 85 குடும்பங்களுக்கு உணவுப்பொதிகள்

முல்லைத்தீவு,ஓக.11

முள்ளியவளை கிழக்கில் உள்ள பொருண்மியம் நலிந்த 85 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் அண்மையில் வழங்கப்பட்டன.

வன்னியின் கண்ணீர் அமைப்பின் ஏற்பாட்டில் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த அமரர்களான இரத்தினம் விசுவநாதன் மற்றும் பரமேஸ்வரி விசுவநாதன் ஆகியோர் நினைவாக அவர்களது பிள்ளைகளால் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

முள்ளியவளை கிழக்கு பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் கிராம அலுவலர் திருமதி யு.சுதாகரன் மற்றும் கிராம அபிவிருத்தி சங்கத்தினர் ஆகியோர் இணைந்து உலர் உணவுப் பொதிகளை வழங்கினர். (ஐ-19)



# தொற்றினால் இறப்பு நிச்சயம்

## பரவுகின்றது மற்றொரு வைரஸ்

கொழும்பு,ஓக.11

தொற்றினால் 88 வீதம் உயிரிழப்பை ஏற்படுத்தும் மாபர்க் என்ற புதிய வைரஸ் தற்போது பரவ ஆரம்பித்துள்ளது என்று உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

எபோல வைரஸ் குடும்பத்தைச் சேர்ந்த இந்த வைரஸ் தற்போது ஆபிரிக்க நாடுகளில் பரவ ஆரம்பித்துள்ளது.

கடந்த 2 ஆம் திகதி உயிரிழந்த ஒருவரின் மாதிரிகளில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் ஊடாக இந்த வைரஸ் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வைரஸ் பரவலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உலக சுகாதார ஸ்தாபனம் கோரிக்கை விடுத்துள்ளது. (ஒ.4)

# சட்டவிரோத மணல் அகழ்வு சந்தேகத்தில் மூவர் கைது

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அனுமதிப்பத்திரத்துக்கு முரணான வகையில் மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து இராமநாதபுரம், கல்மடு நகர் மற்றும் புளியம் பொக்கணை ஆகிய பகுதிகளில் வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் மூவரும் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுதலைசெய்யப்பட்டனர். (ஐ-113)



# போதையில் தாக்குதல் குடும்பஸ்தர் காயம்!

வவுனியா,ஓக.11

மது போதையில் நின்ற இருவர் தாக்கியதில், குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் வவுனியா மரக்காரம்பளைப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை நடந்துள்ளது.

வியாபார நிலையத்துக்குப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக சென்ற குடும்பஸ்தரை, அங்கு மதுபோதையில் நின்றிருந்த இருவர் இணைந்து தாக்குதல் நடத்தியுள்ளனர்.

காயமடைந்த குடும்பஸ்தர் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து தாக்குதலுடன் தொடர்புடைய இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஒ.4-110)

# ஒட்டுசுட்டானில் வங்கி முடக்கம்



முல்லைத்தீவு,ஓக.11

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள இலங்கை வங்கியின் பணியாளர்கள் மூவருக்கு கொரோனாத் தொற்று அடையாளம் காணப்பட்டதையடுத்து வங்கியின் நடவடிக்கை தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளது.

கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கள்ளப்பாடு,செல்வபுரம் மற்றும் கணுக்கேணி, பகுதிகளைச் சேர்ந்த 11 பேருக்கு நேற்றுமுன்தினம் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேசங்களில் கொரோனாத் தொற்றாளர்கள் பலர் சமூக மட்டங்களுடன் தொடர்பை பேணி வருகின்றனர் எனவும், இதனாலேயே இந்த தொற்று ஏற்பட்டுள்ளது என்றும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ஐ-19)

# தலிபான்களுடன் போராட இலங்கைக்கு அழைப்பு

கொழும்பு,ஓக.11

ஆப்கானிஸ்தானின் முக்கிய நகரங்களைக் கைப்பற்ற தலிபான்கள் தொடர்ந்து போராடி வரும் நிலையில், இந்த விடயத்தில் தலையீடு செய்ய வேண்டும் என்று இலங்கைக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரத்தில் சிறப்பான பங்களிப்பை இலங்கையால் வகிக்க முடியும் என்று இலங்கைக்கான ஆப்கானிஸ்தான் தூதுவர் எம். அஷ்ரப் ஹைதாரி தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் பெற்ற அனுபவத்தை இலங்கை பகிர்ந்துகொள்ள முடியும்.

நீண்டகால மோதல் ஆப்கானிஸ்தானில் ஏற்படுத்தும் தாக்கம் தொடர்பில், சர்வதேச சமூகத்துக்கு இலங்கை ஆலோசனை வழங்கமுடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)

# கொரோனா பரிசோதனை முடிவுகளை நம்ப முடியாது

## சந்தேகம் வெளியிட்டார் சுகாதார நிபுணர்



கொழும்பு,ஓக.11

இலங்கையில் கொரோனா தொடர்பில் பரிசோதனைகளை நம்ப முடியவில்லை. இதனால் நாடு பேரழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது என்று சுகாதார நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது அடையாளம் காணப்படும் தொற்றாளர்களை விடவும், ஐந்து மடங்கு அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் [illegible] உள்ள போதிலும் [illegible] தனியார் மருத்துவமனைக்கு அனுப்பப்படுகின்றனர். அதன் மூலம் வெகுமதி பெறும் நடவடிக்கைக்கு சுகாதார அமைச்சு தயாராகி வருகின்றது.

அத்துடன், சர்வதேச விமான நிலையங்களில் உள்ள ஆய்வகங்களில் இலங்கை வீரர்களுக்கு இலவசமாக சோதனைகளை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்கள் குறைந்த அளவு பணத்தை செலவழிப்பதற்கு பதிலாக, தனியார் மருத்துவமனை ஆய்வகங்களுக்கு நிறைய பணம் செலவழிப்பதை [illegible] நிறுத்த [illegible]டும். -என்றார். (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாத் தொற்றைக் காண்பித்து இராணுவ ஆட்சியை அமைக்க முயற்சி

## இடமளிக்க முடியாது என்கின்றது ஐ.ம.சக்தி

**கொழும்பு, ஓக.11**
**கொரோனாத் தொற்று பரவலைக் காரணம் காட்டி அரசு, நாட்டில் இராணுவம் மற்றும் பொலிஸ் ஆட்சியை ஸ்தாபிக்க முயற்சிக்கின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தனாயக்க தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது நாளாந்தம் முன்னெடுக்கப்படும் பி.சி.ஆர். மற்றும் அன்டிஜென் பரிசோதனைகளின் அளவு குறைவடைந்துள்ளபோதிலும், தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகமாகவே காணப்படுகின்றது. இந்தியாவில் அண்மையில் ஏற்பட்டிருந்த நிலைமையையே தற்போது இலங்கையிலும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. மூன்றாவது அலை நிறைவடைந்து நான்காவது அலை உருவாகிக் கொண்டிருக்கின்றது.
சகல மாகாணங்களிலும் கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்படுவதால், வெகுவிரைவில் ஒட்சிசன் வழங்களிலும் சிக்கல் ஏற்படக்கூடும். நாட்டை முடக்காமல் இந்த நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாது. வைரஸ் பரவல் வேகத்துடன் ஒப்பிடும்போது, கொள்வனவுசெய்யப்படும் தடுப்பூசிகள் போதுமானதல்ல.
தடுப்பூசி வழங்கும் பணிகள் துரிதமாக முன்னெடுக்கப்பட வேண்டும். கொவிட் நிலைமையைக் கருத்தில்கொள்ளாமல் அரசியல் தேவைகளுக்காகதீர்மானங்களை எடுக்கக்கூடாது- என்றார். (ஒ.4)

பஸ் நிலையத்தில்

# மயங்கிய இருவரில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு.ஓக.11
பண்டாரவளை பஸ் நிலையத்தில் மயங்கி விழுந்த இருவரில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றவர் தொடர்ந்தும் மயக்க நிலையில் உள்ளார் என்று பண்டாரவளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
50 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவரே உயிரிழந்துள்ளார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட ' அன்டிஜென்' பரிசோதனையில் கொரோனாத் தொற்று இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. எனினும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
அதேவேளை உணவகம் ஒன்றுக்குச் சென்ற ஒருவர் மயங்கி விழுந்த நிலையில், அவர் உடனடியாக பண்டாரவளை அரசினர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்கு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டபோதிலும், பல மணித்தியாலங்கள் ஆகியும் தொடர்ந்து மயக்க நிலையில் உள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று பண்டாரவளை பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்துள்ளார். (ஒ.4)



# ஆசிரியர்களை வஞ்சிக்கும் அரசு

## ஐ.தே.க. கண்டனம்

கொழும்பு.ஓக.11
ஆசிரியர். அதிபர்கள் தங்களின் உரிமைகளுக்காகவே போராடுகின்றனர். அவர்களுக்கு தீர்வு வழங்காமல் மிகவும் கீழ்த்தரமான முறையில் நிந்திப்பது வன்மையாக கண்டிக்கத்தக்கது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் ரங்கே பண்டார தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், ஆசிரியர், அதிபர் சேவையில் நிலவும் பிரச்சினைகளை இனங்கண்டு நல்லாட்சி அரசால் அதற்கு தீர்வு வழங்கும் வகையில் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது. இருப்பினும் துரதிஷ்டவசமாக 2019 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு வழங்குவோம் என்று குறிப்பிட்டு இந்த அரசு ஆட்சிக்கு வந்தது. இன்று எந்தப் பிரச்சினைகளும் தீர்வு வழங்கப்படவில்லை. மாறாக உரிமைகளுக்காக போராடும் ஆசிரியர்களும், அதிபர்களும் படுமோசமானவர்கள் என்று கீழ்தரமான சொற்பிரயோகங்களால் நிந்திக்கப்பட்டுள்ளனர்.
ஆளும் தரப்பினரது செயற்பாடுகள் வன்மையாகக் கண்டிக்கத்தக்கவை. -என்றார். (ஒ.4)

# பொருளாதார நெருக்கடிக்குள் உடன் தீர்வை வழங்க முடியாது

## அரசுக்கு சார்பாக சு.க.




கொழும்பு.ஓக.11
கொரோனாத் தொற்றால் நாடு பொருளாதார ரீதியாக பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள நிலையில், அதிபர், ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு வழங்குவது கடினமாகும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான சாந்த பண்டார தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
தற்போது ஆசிரியர்,அதிபர்களின் சம்பளப் பிரச்சினை பெரும் சமூகப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவின் 'சுபீட்சத்துக்கான நோக்கு' வேலைத்திட்டத்தின் கீழ் ஆசிரியர், அதிபர்களுக்கான சம்பளப் பிரச்சினை தீர்க்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவும் உறுதியளித்துள்ளார்.
எனவே எடுத்த எடுப்பில் உடனடியாக தீர்வு வழங்க முடியாது. எமது நாட்டில் மாத்திரமல்ல முழு உலகிலும் கொரோனா அச்சுறுத்தல் காணப்படுவதால், பொருளாதார ரீதியாக எமது நாடு பெரும் சவால்களுக்கு முகம் கொடுத்து வருகின்றது. என்றார். (ஒ.4)

# ஆசிரியர் சேவையை கட்டாய சேவையாக்குக

## சுதந்திர ஆசிரிய சங்கம் கோரிக்கை

கொழும்பு.ஓக.11
ஆசிரியர்களின் சேவையை கட்டாய சேவையாக்கி, அவர்களது உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், சமூகத்தில் நன்மதிப்பை ஸ்தாபிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று சிறிலங்கா சுதந்திர ஆசிரிய சங்கம் வலியுறுத்தியுள்ளது.
இது தொடர்பில் சங்கத்தின் பொதுச் செயலாளர் விவானி ஹெட்டிகே தெரிவிக்கையில்,
கடந்த 27 வருடங்களாக அதிபர், ஆசிரியர்களுக்கான சம்பள அதிகரிப்பில் குளறுபடி நடந்துள்ளது. எனினும், அதிபர், ஆசிரியர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு, சமூகத்தில் அவர்களுக்குள்ள நன்மதிப்பை இழக்கச் செய்துள்ளதால் சம்பளம் பூதாகர பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.
சம்பள அதிகரிப்பைச் செய்து கொடுப்பதற்கு பெரிதாக ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. நாடு பொருளாதார ரீதியாக நெருக்கடியில் உள்ளதை நாம் அறிவோம். நாம் முட்டாள்கள் அல்லர். எமக்கான சம்பள அதிகரிப்பு பணத்தை பின்னர் தாருங்கள். எனினும், அந்த சம்பள அதிகரிப்பை வர்த்தமானியொன்றின் ஊடாக உறுதிசெய்யும்படி கேட்கின்றோம்- என்றார். (ஒ.4)

# அரசை பலவீனப்படுத்த முயற்சிக்க வேண்டாம்

## ஊடகங்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு.ஓக.11
பொய்யான செய்திகளை வெளியிட்டு அரசையும், சுகாதார துறையையும் பலவீனப்படுத்த முயற்சிக்க வேண்டாம் என்று பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
கொரோனாத் தொற்றாளர்களுக்கான தற்காலிக சிகிச்சை நிலையங்கள் பொது ஜன பெரமுனவின் நிதியத்தின் செலவில் நிர்மாணிக்கப்பட்டதே தவிர, அரச நிதி செலவிடப்படவில்லை. அரச நிதி செலவிடப்பட்டுள்ளது என்று வெளியாகியுள்ள செய்தி அடிப்படையற்றது.
கொரோனா வைரஸ் தாக்கம் பெரும் சவாலைத் தோற்றுவித்துள்ளது. இவ்வாறான நிலையில் ஊடகங்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். நாட்டு மக்கள் மத்தியில் அரசையும், சுகாதாரத் துறையையும் பலவீனப்படுத்தும் வகையில் செய்தி வெளியிடுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.
கட்சி உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் என பலதரப்பட்ட தரப்பினர் கடந்த நான்கு வருடங்களாக கட்சிக்கு வழங்கிய நிதியத்தில் இருந்து, தற்காலிக சிகிச்சை மத்திய நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டன.
அதனடிப்படையில் கட்சியின் நிதியத்தில் இருந்து நிர்மாணிக்கப்பட்ட 20 தற்காலிக சிகிச்சை மத்திய நிலையங்கள் கடந்த மே மாதம் நிர்மாணிக்கப்பட்டு சுகாதாரத் தரப்பினரது செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்டன.- என்றார். (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்

## உதயன் கல்விப் பிரிவு

**பரீட்சை இலக்கம் 4**


பெயர் : ........................................ நேரம் : 1 மணித்தியாலம் **பகுதி 1**

மிகவும் நெருங்கிய தொடர்புள்ள உருச்சோடிக்குரிய அடைப்பை தெரிவு செய்க.


1)



2)




3) பின்வரும் உருக்களை பூர்த்திசெய்வதற்கு தேவையான எஞ்சிய பகுதியை தெரிவு செய்க.



4)



5) உருவில் உள்ள கோலத்துக்கு ? என்று குறிப்பிட்ட இடத்துக்கு பொருத்த மான விடையைத் தெரிவுசெய்க.




i.32 ii.20 iii. 16


6) அரபா சபாவிலும் உயரமானவர் மதீஹா. சபாவிலும் குட்டையானவர் இம்மூவரிலும் குட்டையானவர் யார்?

1. சபா 2. மதீஹா 3. அரபா

7) நான்கு செவ்வகங்களையும் இரண்டு சதுரங்களையும் கொண்டு ஆக்கக் கூடிய திண்ம உரு எது?

1. கனவுரு 2. சதுரமுகி 3. நான்முகி

8) பொருத்தமற்ற உருவைத் தெரிவுசெய்க.



9) ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாத உருக்கள் இடம்பெறும் அடைப்பை தெரிவுசெய்க.



10) ஊதி ஒன்றின் விலை ரூபா 15 உம் மிட்டாய் ஒன்றின் விலை ரூபா 7 உம் ஆகும். சிப்ரா ரூபா 88 ஐக் கொண்டு சில ஊதிகளையும் சில மிட்டாய்களையும் வாங்கினாள். சிப்ரா வாங்கிய ஊதிகள் எத்தனை?

1. 6 2. 4 3. 5

11) ஒரு திங்கட்கிழமை ஆரம்பமாகும் 30 நாள்கள் கொண்ட மாதமொன்றில் உள்ள சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளின் எண்ணிக்கை முறையே

1. 4,4 2. 4,5 3) 5,4

12) இன்று வியாழக்கிழமையாகும். "நாளை மறுநாள் எனது அண்ணனின் பிறந்தநாள்" என சுஹா நேற்று கூறினாள் எனின் சுஹாவின் அண்ணனுடைய பிறந்த நாள் வரும் தினம் எது?

1. வெள்ளி 2. சனி 3. ஞாயிறு.


13) சூரியன், கடல், வீடு, மலை, தாவரங்கள் என்பவற்றில் பொருந்தாத சொல்

1. மலை 2. வீடு 3. தாவரங்கள்

14) இரு பகுதிகளும் சமமாக இருக்கும் நிரையைத் தெரிவு செய்க.

1. 64 88 129 - 64 87 129
2. ABD VKM - BAD VKM
3. BIG 234 - BIG 234

15)





16) TOP = 428 எனவும் MAP= 318 எனவும் எழுதப்பட்டால் TOMATO என்பது

1. 423142 2. 423182 3. 413242

17) கனகாம்பரம் என்பது  ஆகும். இதற்கேற்ப பரம்பரம் என்பது குறிப்பது?



18) ஒரு கடதாசித் துண்டை நான்காக மடித்து அதில் துளைகளிடப்பட்ட விதத்தை முதலில் உள்ள உரு காட்டுகிறது. இக்கடதாசித் துண்டை மீண்டும் விரிக்கும் போது தோன்றும் உரு எது?



19) 'அடாது செய்பவர் படாது படுவர்' என்ற பழமொழியின் கருத்து

1. எதையும் துணிந்து செய்தல் வேண்டும்
2. துன்பம் விதைத்தவர் துன்பம் அனுபவிப்பர்
3. கோபம் பாவத்தை தரும்

20) A- அருமைக் குஞ்சு மூன்றையும்
B - குருவி ஒன்று மரத்திலே
C- அதில் வளர்த்து வந்தது
D- கூடு ஒன்றை கட்டியே

மேலேயுள்ள கவிதையின் வரிகள் ஒழுங்கின்றி எழுதப்பட்டுள்ளன. அர்த்தமுள்ள கவிதையாக அமையுமாறு ஆங்கில எழுத்துக்களைப் பொருத்தமாக ஒழுங்குபடுத்தினால் வருவது?

1. BACD 2. DACB 3. BDAC


21) கோலத்துக்கேற்ப வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

123, 234, 345, ..............., 567, ...............


1. 456,568 2. 346, 678 3. 456,678


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22) முதலில் தரப்பட்ட உருக்கள் இரண்டையும் ஒன்றின்மீது ஒன்று வைக்கும் போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க.





23) முதலில் தரப்பட்ட உருவை முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது தோன்றும் உருவைத் தெரிக.



24) 

25) முதலில் தரப்பட்ட உருவுக்கு ஒத்த உருவைத் தெரிக



26) 


27) ஓர் வரிசையில் சுகிர்தனுக்கு முன்னால் 8 பேர் நின்றனர். அவனுக்குப் பின்னால் 9 பேர் நின்றனர். எனின் அவ்வரிசையில் நின்றவர்களின் எண்ணிக்கை யாது?

1. 17 2. 16 3. 18


28) சனூஸின் வீடு சுரேகாவின் வீட்டுக்கு 100m கிழக்கு திசையிலும் பிரியகனின் வீட்டுக்கு 100m வடக்குத் திசையிலும் அமைந்துள்ளது. பிரியகனின் வீடு அமைந்திருப்பது சுரேகாவின் வீட்டுக்கு என்ன திசையில்?

1. தென்கிழக்கு 2. வடகிழக்கு 3. வடமேற்கு

பின்வரும் உருக்களில் உள்ள எண் கோலத்தை இனங்கண்டு ? இடப்பட்ட இடத்துக்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.

29) 


1) 28
2) 26
3) 30

30) 


1) 11
2) 30
3) 35

31) பின்வரும் எண்களைப் பின்னாலிருந்து முன்னால் எழுதும்போது அதே எண்ணை விடையாகத் தரும் எண் யாது?


1. 5230425 2. 1017001 3. 2038302

32) எனது அம்மாவின் தம்பியின் மகனுக்கும் எனக்கும் இடையிலான உறவு முறை யாது?

1. மாமாவும் மருமகனும் 2. மச்சானும் மச்சானும்
3. மாமியும் மருமகளும்

33) நாள் ஒன்று ஆரம்பிக்கும் நேரத்தை 24 மணி நேரத்தில் குறிக்கும்போது சரியாகக் காட்டுவது எது?

1) 00:00 2) 12:00 3) 24:00

34) 

இவ்வுருவில் உள்ள சதுரங்களின் எண்ணிக்கை யாது?

1. 15 2. 12 3. 16


35) எனக்கு வயது 12 வருடங்களாக இருந்தபோது எனது சகோதரனின் வயது எனது வயதின் அரைவாசியாக இருந்தது. எனக்கு இப்போது வயது 16 வருடங்களாகும் எனின் சகோதரனின் வயது எத்தனை வருடங்களாகும்?

1. 10 2. 8 3. 6

36) பிழையான கருத்து இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க

1. கிளி ஒரு பறவை. அது பச்சை நிறம்
2. தவளை நீரிலும் வாழும், அது நிலத்தில் முட்டையிடும்
3. நுளம்புக்கு ஆறு கால்கள் உண்டு. அது நோயைப் பரப்பும்

தரப்பட்ட உருவை அவதானித்து 37ஆம் 38 ஆம் 39ஆம் வினாக்களுக்கு விடை தருக.




37) மூன்று உணவையும் விரும்புவோர் எத்தனை பேர்?

1. 4 2. 6 3. 3

38) எந்த உணவையும் விரும்பாதோர் எத்தனை பேர்?

1. 5 2. 2 3. 4

39) தோசை விரும்புவோர் எத்தனை பேர்?

1. 4 2. 13 3. 9

40) 9 தொடக்கம் 109 வரை எழுதும் போது இலக்கம் 9ஐ எத்தனை தடவைகள் எழுது முடியும்.

1. 11 2. 19 3. 21

## பரீட்சை இலக்கம் 3 இன் பகுதி I இற்கான விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 2 | 11. | 2 | 26. | 2 |
| 2. | 1 | 12. | 1 | 27. | 3 |
| 3. | 1 | 13. | 1 | 28. | 1 |
| 4. | 2 | 14. | 2 | 29. | 2 |
| 5. |  | 15. | 1 | 30. | 2 |
| | | 16. | 3 | 31. | 1 |
| | | 17. | 3 | 32. | 2 |
| | | 18. | 2 | 33. | 2 |
| | | 19. | 3 | 34. | 2 |
| | | 20. | 3 | 35. | 1 |
| 6. | 1 | 21. | 2 | 36. | 3 |
| 7. | 2 | 22. | 2 | 37. | 1 |
| 8. | 3 | 23. | 2 | 38. | 3 |
| 9. | 2 | 24. | 3 | 39. | 3 |
| 10. | 2 | 25. | 1 | 40 | 2 |

பரீட்சை இலக்கம் 3 இன் பகுதி II எதிர்வரும் 16.08.2021 திங்கட்கிழமை வெளியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### 4 வாரங்களுக்காவது...

உத்தரவை விதிக்குமாறு சுகாதார அதிகாரிகள், அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

'கொரோனா நோயாளிகளின் அதிகரிப்பு மற்றும் கொரோனா தொடர்பான இறப்புகள் காரணமாக ஊரடங்கு உத்தரவை விதிப்பது அவசியம். நாட்டின் தற்போதைய நிலைமையை சுகாதாரத்துறையினரால் சமாளிக்க முடியவில்லை.

கொரோனா நோயாளிகளின் நாளாந்த எண்ணிக்கை கிட்டத்தட்ட 3 ஆயிரத்தை எட்டியுள்ள அதேவேளை, இறப்பு எண்ணிக்கை ஒரு நாளைக்கு 100இனை எட்டியுள்ளது. அதேபோல், கடந்த 13 நாட்களில் கொரோனா சாவு எண்ணிக்கை சுமார் ஆயிரத்தை எட்டியுள்ளது.

மருத்துவமனைகளின் பிரேத அறைகள் கொரோனவால் பாதிக்கப்பட்டவர்களின் உடல்களால் நிரம்பி வழிகின்றன. அதே நேரத்தில் மருத்துவமனைகளின் பொது விடுதிகளிலும் கொரோனா நோயாளிகளின் வருகை அதிகரித்துள்ளது. கொரோனா நோயாளிகளின் தொடர்ச்சியான அதிகரிப்பைக் கட்டுப்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக நிலைமையைக் குறைக்கவும் தொற்று விகிதத்தைக் குறைக்கவும் தேவையான நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட வேண்டும்' என்று சுகாதார அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-22)

### நல்லூர்...

யமாகுமென யாழ்ப்பாணம் மாநகர சபை அறிவுறுத்தியுள்ளது. நல்லூர் கந்தன் உற்சவ நடைமுறைகள் தொடர்பாக யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் மணிவண்ணன் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

தற்போது பரவிவரும் கொரோனா தொற்றைக் கருத்தில்கொண்டு நல்லூர் முருகப்பெருமானின் இவ்வருட உற்சவம் முழுமையான சுகாதார நடைமுறைகளை மிக இறுக்கமாகப் பேணி அடியார்களின் பங்குபற்றுதலின்றி அல்லது அந்தந்த சந்தர்ப்பங்களுக்கேற்ப மட்டுப்படுத்தப்பட்ட அடியார்களுடனேயே நடைபெறவுள்ளது. எனவே நெருக்கடிமிக்க அசாதாரண சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு மிகமிக பொறுப்புடனும் அவதானத்துடனும் நடந்து கொள்ளுமாறு நல்லைக்கந்தன் அடியார்களை மிகப் பணிவாகக் கேட்டுக்கொள்கிறோம். குழந்தைகளும் சிறுவர்களும் முதியவர்களும் ஆலயத்துக்கு வருவதை முற்றாகத் தவிர்க்கவும்.

கொவிட் 19 நோய் அறிகுறிகள் உள்ளவர்கள் வீதித்தடையுடன் திருப்பி அனுப்பப்படுவார்கள்.

ஆலயத்தினுள் அனுமதிக்கப்படும் வேளையில் அடியார்கள் முழுமையாக நடைமுறைகளை பின்பற்றுவதோடு தடுப்பூசி போடப்பட்ட அட்டைகளை வைத்திருப்பதும் அவசியமாகும்.

ஆலயத்துக்கு அனுமதிக்கப்படும் வேளையில் ஆண் அடியார்கள் வேஷ்டியுடனும் பெண்கள் கலாசார உடைகளுடனும் வருதல் வேண்டும். சுகாதார நடைமுறைகளுக்கேற்ப அடியார்கள் ஆலயத்தினுள் வரையறுக்கப்பட்ட அளவில் அனுமதிக்கப்படும் பட்சத்தில் தேவஸ்தானத்தின் அறிவுறுத்தல்களின்படி அவர்கள் ஆலய வளாகத்தினுள் தரித்து நிற்கவோ அமர்ந்திருக்கவோ அனுமதிக்கப்படமாட்டார்கள். உரிய சமூக இடைவெளியுடன் வழிபாட்டை நடத்திச் செல்வதற்கு மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

பக்தர்களின் நன்மை கருதியும் ஆலய உற்சவம் அமைதியான முறையில் நடைபெறுவதை உறுதிப்படுத்தும் முகமாகவும் இம்முறையும் வீதித்தடைகள் முழுமையாகப் போடப்படும். வழமைபோல் மாற்றுப்பாதை அமுலில் இருக்கும்.

அடியவர்களின் சுகாதார நன்மையைக் கருத்திற்கொண்டு ஆலயத்தினுள் அனுமதிக்கப்படும் சந்தர்ப்பத்தில் சகல அடியவர்களும் முத்திரைச் சந்தியிலிருந்து பருத்தித்துறை வீதியால் மாத்திரமே ஆலயத்திற்குள் செல்ல அனுமதிக்கப்படுவர். ஆலயத்திற்கு வந்து சேரும் ஏனைய மூன்று வீதிகளும் அடியவர்கள் செல்வதற்கு முழுமையாகத் தடை செய்யப்படும்.

வீதித்தடைக்கு உள்ளே நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட மக்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள், நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் மாத்திரம் மாநகர சபையின் அனுமதி அட்டையுடன் ஏனைய வீதித்தடைகளினூடாகச் சென்று வர அனுமதிக்கப்படுவர்.

ஆலயத்தினுள் அடியவர்களை அனுமதிப்பது, எத்தனை பேரை அனுமதிப்பது போன்றவை தொடர்பாக அவ்வப்போது உள்ள நிலைமைகளைக் கருத்தில்கொண்டு சுகாதாரத் தரப்பின் வழிகாட்டலோடு தீர்மானிக்கப்படும். தற்போதைய அசாதாரண சூழ்நிலையில் அங்கப்பிரதட்சணம் செய்தல், அடி அழித்தல், கற்பூரச்சட்டி எடுத்தல், காவடி, தூக்குக்காவடி எடுத்தல் போன்ற நேர்த்திக்கடன்கள் மேற்கொள்ளுதல், தாகசாந்தி, அன்னதானம் வழங்கல் போன்றவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன.

ஆலயச் சூழலிலும் ஆலயத்தை அண்டியுள்ள பகுதிகளிலும் அடியார்கள் மற்றும் பொதுமக்கள் கூடுவதற்கான தெய்வீக சொற்பொழிவுகள், தெய்வீக இசை அரங்குகள், நிகழ்வுகள், களியாட்ட நிகழ்வுகள் மற்றும் வியாபார நடவடிக்கைகள் அனைத்தும் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. கொரோனா தொற்று சூழலினால் எம்மால் எடுக்கப்படும் விசேட நடவடிக்கைகளால் பக்தர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துவதோடு, தற்போது எழுந்துள்ள மிகக்கடுமையான நெருக்கடி நிலையைக் கருத்திற்கொண்டு வழிகாட்டல்களுக்கும் நடவடிக்கைகளுக்கும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என வேண்டுகிறோம் என்றுள்ளது. (ம-26)

### குளவி...

னின்றி உயிரிழந்தார். அவருக்கு முன்னெடுத்த பி.சி.ஆர். சோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குமாரசாமிபுரம் பகுதியில் கடந்த 8ஆம் திகதி குளவிக் கொட்டுக்கு இலக்கான நபரொருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவர் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் சோதனையில் கொரோனா உறுதிப்படுத்தப்பட்டது. உயிரிழந்தவருக்கு வயது 64. (ம-6)

### மயங்கி...

உறுதிப்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த 30 வயதுடைய கர்ப்பிணிப் பெண்ணே நேற்று முன்தினம் திங்கட்கிழமை உயிரிழந்துள்ளார்.

'அவர் நேற்று திடீரென வாந்தியெடுத்து மயக்கமடைந்து நிலத்தில் சரிந்துள்ளார். உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

அங்கு அவர் ஏற்கனவே உயிரிழந்துள்ளார் என்று வெளிநோயாளர் பிரிவிலேயே மருத்துவ அறிக்கையிடப்பட்டது. குறித்த பெண்ணின் சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டு மாதிரிகள் பெறப்பட்டு பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அவருக்கு கொவிட்19 நோய்த்தொற்றுள்ளமை பரிசோதனையில் தெரியவந்துள்ளது' என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பான இறப்பு விசாரணையை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் முன்னெடுத்தார்.

உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலத்தை சுகாதார நடைமுறைகளுக்கு அமைய தகனம் செய்ய திடீர் இறப்பு விசாரணை அதிகாரி அறிக்கையிட்டார். (ம-26)

# யாழில் மேலும் நால்வர் கொரோனாவால் சாவு!

யாழ்ப்பாணம், ஓக. 11

யாழ்ப்பாணத்தில் கடந்த 24 மணிநேரத்தில் மேலும் 4 பேர் கொவிட் தொற்றால் உயிரிழந்துள்ளனர் என்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த ஊர்காவற்றுறையைச் சேர்ந்த 84 வயதுடைய பெண் ஒருவரும் மானிப்பாய், நவாலி மேற்கைச் சேர்ந்த 68 வயதுடைய பெண் ஒருவரும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 78 வயதுடைய பெண் ஒருவருமாக மூவர் உயிரிழந்தனர்.

அத்துடன், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த 30 வயதுடைய கர்ப்பிணிப் பெண் ஒருவர் வெளிநோயாளர் பிரிவில் உயிரிழந்த நிலையில் பி.சி.ஆர் பரிசோதனையில் கொவிட்19 நோய்த் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொவிட்19 நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 145ஆக உயர்வடைந்துள்ளது. (ம-26)

# கொரோனா கோரம் 118 பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஓக. 11

இலங்கையில் கொரோனா வைரஸ் பேரழிவை ஏற்படுத்தி வருகின்றது. நாளாந்த மரண எண்ணிக்கை என்றுமில்லாதவாறு அதிகரித்துச் செல்கின்றது. நேற்றுமுன்தினம் 118 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர். இதுவே இலங்கையில் நாள் ஒன்றில் பதிவான அதிகூடிய கொரோனா சாவு எண்ணிக்கையாகும்.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 118 பேரில் 79 ஆண்களும், 39 பெண்களும் அடங்குகின்றனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 5 ஆயிரத்து 340ஆக அதிகரித்துள்ளது என்றும் அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-22)


# பண்ணைக் கடலில் வீழ்ந்து உயிரிழந்தவருக்கு கொவிட்

யாழ்ப்பாணம், ஓக. 11

பண்ணைக் கடலில் தவறி விழுந்து உயிரிழந்த இளைஞனுக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கே.கௌதமன் (வயது 31) எனும் இளைஞன் பண்ணை பாலத்தடியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை நண்பர்களுடன் பொழுதைக் கழித்துக்கொண்டு இருந்தவேளை, தவறி கடலினுள் விழுந்து உயிரிழந்தார். அவரது சடலம் மீட்கப்பட்டு பி.சி.ஆர் சோதனை செய்யப்பட்டதில் அவருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. (ம-26)

## பேருந்தில் பயணித்த பெண்ணொருவர் இருக்கையில் இருந்தவாறு உயிரிழப்பு



கொழும்பு, ஓக. 11

ஹொரணவிலிருந்து பாணந்துறைக்குப் பேருந்தில் பயணித்த பெண்ணொருவர் தனது இருக்கையில் இருந்தவாறே உயிரிழந்துள்ளார் என்று பாணந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

பேருந்தில் தூங்கிக்கொண்டிருந்த பெண்ணை நடத்துனர் எழுப்பிய போது அவர் சுயநினைவற்ற நிலையில் காணப்பட்டுள்ளார். பின்னர் அவர் பாணந்துறை மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்ட போது அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று அறிவிக்கப்பட்டது. அந்தப் பெண்ணுக்கு பி.சி.ஆர். பரிசோதனை செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்ப்பனைக்கு

யாழ்ப்பாணம் ஓட்டுமடம் முதலாம் ஒழுங்கையில்
7 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.
2 பரப்பாக பிரித்துக்கொடுக்கப்படும்.
1 பரப்பின் விலை - 6 லட்சம்
யாழ் பஸ் நிலையத்தில் இருந்து 2 KM தூரம்
T.P - 0762212037 / 0767341023 / 0770642661

## மரண அறிவித்தல்



### வீரபத்திரன் கந்தசாமி

பேராதனைப் பல்கலைக்கழக புவியியல் விரிவுரையாளரும், மட்டக்களப்பு முன்னாள் உணவுக் கட்டுப்பாட்டாளரும், அக்கரைப்பற்று முன்னாள் டி.ஆர். ஓவும், அம்பாறை முன்னாள் உதவி அரசாங்க அதிபரும், இலங்கை நீதி யமைச்சினதும் பொதுநிர்வாக முகாமைத்துவ முன்னாள் உதவிச் செயலாளரும், கயானா கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் முன்னாள் உதவிச் செயலாளரும், லண்டன் ஓய்வூதியத் திணைக்களத்தின் இளைப்பாறிய அரச உத்தியோகத்தரும், லண்டன் வோல்தம்ஸ்ரோவை வாழ்விடமாகவும் கொண்ட வீரபத்திரன் கந்தசாமி அவர்கள் 06.08.2021 அன்று காலமானார் என்பதை ஆழ்ந்த கவலையுடன் அறியத் தருகின்றோம்.

அன்னார் மட்டக்களப்பு கழுதாவளையைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. திருமதி வீரபத்திரன் ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு.திருமதி கைலாசபிள்ளையின் அன்பு மருமகனும், சரோஜினிதேவியின் அன்புக் கணவரும், தாமிரா, மயூரணி, மாதுமை ஆகியோரின் அன்புத் தந்தையும், றொபேட், ஜனகன் ஆகியோரின் அன்பு மாமனாரும், லக்ஸ்மி, ராதா, மயிலன், றம்யா, சந்தியா, வித்யா, லவின் ஆகியோரின் பாசமிகு பேரனும், பாக்கியகலா, தியாகராஜா, காலஞ்சென்ற வைரமுத்து, குழந்தைவடிவேல் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற திரு.திருமதி யோகநாதன், காலஞ்சென்ற திரு. கைலாசரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.08.2021) வியாழக்கிழமை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகட்கு:
தாமிரா (மகள்) : 00447838 190 357
மயூரணி (மகள்) : 00447432 062 460
மாதுமை (மகள்): 00447534 980 106

## மரண அறிவித்தல்

பிறப்பு 23 . 04 . 1934



இறப்பு 09 . 08 . 2021

### திருமதி செல்வராணி நடராஜா

(இளைப்பாறிய ஆசிரியர், புனித தோமையார் பெண்கள் பாடசாலை, மாத்தளை)

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், கனடா Ajax ஐ வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்வராணி நடராஜா (இளைப்பாறிய ஆசிரியர், புனித தோமையார் பெண்கள் பாடசாலை, மாத்தளை) 09.08.2021 திங்கட்கிழமை Ajaxஇல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - இரத்தினம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், சின்னத்தம்பி நடராஜா அவர்களின் அன்பு மனைவியும், அசோகன், அகிலா, கவிதா, நளினா ஆகியோரின் அன்புத் தாயாரும், லேனா, செந்தில் நாதன், சிவரவீன், விஜயசுகந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும் துளிர், அருணி, மதுரன், நிலா, பரிதி, கீர்த்தி, பரணி ஆகியோரின் அன்பு அப்பம்மா / அம்மம்மாவும், ஜெயராணி, புஷ்பராணி, ஸ்ரீகாந்தன், ஸ்ரீபாலா, ஸ்ரீநேசா, ஸ்ரீரவீந்திரா ஆகியோரின் அன்பு சகோதரியும், கணேசன், காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் ஜெயலக்ஷ்மி, பிரேமரதி, விஸ்வரஞ்சினி, வத்சலா, காலஞ்சென்ற அன்னபூரணம் மற்றும் கனகரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.08.2021) புதன் கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அசோகன் - மகன் : +12898288673
அகிலா - மகள் : + 164722[illegible]
கவிதா - மகள் : + 14169[illegible]
நளினா - மகள் : +14168971733

## துயர் பகிர்வு

எமது இசையாசிரியர் கழக அங்கத்தவரும், யாழ். கல்வி வலய சங்கீத பாட ஆசிரிய ஆலோசகருமான திருமதி சாந்தினி மாலா தர்மராஜன்
அவர்களின் கணவர்

### திரு.செல்லத்துரை தர்மராஜன்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

கடந்த 30.07.2021 அன்று இறைபதமடைந்தார். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி! சாந்தி!

**யாழ். கல்விவலய இசையாசிரியர் கழகம்**

## கண்ணீர் காணிக்கை...!!!

### ரவீந்திரராஜ் மலர்மதி

(தாதிய உத்தியோகத்தர், யாழ் போதனா மருத்துவ மனை, கொழும்பு தேசிய வைத்தியசாலை)



அளவில்லா அன்பு கொண்ட பாசமிகு தங்கை மதியின் இழப்பு எமக்கு ஈடு செய்ய முடியாதது. அவரது இழப்பினால் துயருற்றிருக்கும் கணவன், பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினரின் துயரில் பங்கு கொண்டு எமது அனுதாபங்களை தெரிவிப்பதுடன், எமது அன்புத் தங்கையின் ஆன்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

அன்புத் தங்கையின் பிரிவால் வாடும்,

**க.நாகராசா குடும்பம்.** (பட்டண்ணை) கீரிமலை.

## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 04 . 06 . 1944



உதிர்வு 21 . 07 . 2012

### அமரர் திரு. நாகலிங்கம் தியாகராசா

திதி : திருதியை

ஒன்பது ஆண்டு ஆனதய்யா இன்று
ஆறவில்லை எம்துயரம்
ஒருமுறை வருவீர்களா உங்கள்
திருமுகம் காண்பதற்கு

சைவப் பாடசாலை லேன்,
கோண்டாவில் மேற்கு

குடும்பத்தினர்
தி.வைகுந்தவாசன்

## கண்ணீர் அஞ்சலி

மலர்வு 27 . 03 . 1937



உதிர்வு 02 . 08 . 2021

கொடைவள்ளல் சமூகத்தொண்டர்
**திரு.சுப்பிரமணியம் கதிர்காமநாதன்**
(சுவிஸ்நாதன்) அவர்களின் அன்புத்தாயார்

### திருமதி சுப்பிரமணியம் அன்னலட்சுமி

(கோவளம், காரைநகர்)

அவர்களின் மரணச்செய்தி கேட்டுத் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு எமது இரங்கலைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திகின்றோம்.

*ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

**தோப்புக்காடு கிராம அபிவிருத்திச் சங்கம்**
**தோப்புக்காடு, காரைநகர்.**

# தடுப்பூசி பெறாதோர் தகவல்கள் சேகரிப்பு

கொழும்பு,ஓக.11

மேல் மாகாணத்தில் 60 வயதுக்கு மேற்பட்ட இதுவரை தடுப்பூசி பெறாதவர்கள் தொடர்பில் தேடுதல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பிரதேச செயலாளர்கள் ஊடாக கிராம உத்தியோகத்தர்களிடமிருந்து அவர்கள் தொடர்பான தகவல்கள் பெற்றுக்கொள்ளவுள்ளப்படவுள்ளன.

தகவல்களைப் பெற்றுக்கொண்ட பின்னர், தடுப்பூசி செலுத்திக்கொள்ளாதவர்களை தடுப்பூசி மத்திய நிலையங்களுக்கு அழைத்து வந்து அல்லது அவர்களது வீடுகளுக்குச் சென்று தடுப்பூசியை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் முன்னடுக்கப்படும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார். (ஓ.4)

## ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புடைய நால்வர் கைது

புதுடில்லி, ஓக.11

ஐ.எஸ். தீவிரவாத அமைப்புடன் தொடர்புடைய 4 பேரை இந்திய தேசிய புலனாய்வு முகாமை அதிகாரிகள் கர்நாடகா மாநிலத்தில் கைது செய்துள்ளனர்.

காஷ்மீரில் கைதுசெய்யப்பட்ட ஒருவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் இந்த நால்வரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவர் ஐ.எஸ். அமைப்பின் முக்கிய கட்டுரைகளை கன்னடத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டு வந்துள்ளார். கர்நாடகா, கேரளா, மகாராஷ்டிரா, உ.பி., காஷ்மீர் ஆகிய மாநிலங்களை சேர்ந்த 20க்கும் மேற்பட்ட இளைஞர்களை ஐ.எஸ். அமைப்பில் இவர்கள் சேர்த்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## பெண் கணக்காளர் தேவை

நல்லூரில் இயங்கும் கடை ஒன்றிற்கு
பெண் கணக்காளர் தேவை.
சம்பளம் மற்றும் இதர விபரங்களுக்கு
உடன் தொடர்பு கொள்ள
021 221 4479

## வேலையாட்கள் உடனடியாக தேவை

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள உணவகம் ஒன்றிற்கு பின்வரும் வேலைகளுக்கு ஆட்கள் (ஆண்/பெண்) தேவை.
சிற்றுண்டி தயாரிப்பாளர், சப்பிளேயர் (Supplier), காசாளர் (Cashier)
தொடர்பு:0772228842, 021 222 2054

## வேலையாட்கள் தேவை


யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு செங்கல்கட்டு வலையில் நன்கு அனுபவமுள்ள மேசன் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்யக் கூடிய மேசன் கூலியாட்கள், Water base வேலை தெரிந்த பெயின்ரர் (Painter) தேவை.
தொடர்பு: 076 3165 734

## காணி விற்பனைக்கு

கலட்டி ஒழுங்கை, வட்டு வடக்கு,
சித்தங்கேணியில் வளவு பரப்பு 13
குளி 09 விற்பனைக்கு உண்டு.
ஒரு பரப்பு ரூபா 10 லட்சம்
தரகர் தேவையில்லை.
தொடர்பு: 0776180644

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெல்டா திரிபு வைரஸ் 3 வாரங்களில் தீவிரம்



## மருத்துவர்கள் எச்சரிக்கை

கொழும்பு,ஓக.11
இலங்கையில் திரிபடைந்த டெல்டா வைரஸ் தொற்று அடுத்து வரும் 3 வாரங்களில் மோசமடையலாம் என்று மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.
அவர்கள் மேலும் தெரிவிக்கையில், டெல்டா திரிபுக்கு எதிரான தடுப்புப் போராட்டத்தால், சுகாதார கட்டமைப்பும் தொற்றாளர்கள் நிறைந்து வழியும் மருத்துவமனைகளும் சோர்வடைந்துள்ளன. இது வெறும் ஆரம்ப கட்டமே. இன்னும் மூன்று வாரங்களில் நிலைமை மோசமடையக்கூடும்.
அடுத்துவரும் வாரங்களில் கொரோனாத் தொற்றால் உயிரிழப்புக்கள் அதிகரிக்கக்கூடும். ஏனைய நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் மருத்துவமனைக்குச் செல்ல அஞ்சுவதால் இறப்புக்கள் மேலும் அதிகரிக்கலாம்.
ஒட்சிசனுக்கு தட்டுப்பாடு ஏற்படுமேயானால் இறப்புகளைத் தவிர்க்க முடியாமல் போகலாம். மருத்துவமனைகளில் போதுமான கட்டில்கள் இல்லாததால் அடுத்து வரும் வாரங்களில் கொரோனாத் தொற்றால் நாளாந்தம் 200 இறப்புக்கள் சம்பவிக்கக்கூடும். இரண்டு நோயாளர்கள் பகிரும் படுக்கைகளில் பல நோயாளர்கள் தங்களது இறுதி மூச்சை விடுகின்றனர்.
அத்துடன் நோயாளர்கள் தமது வாழ்க்கையில் மிக மோசமானவற்றை காண்பதால் கடுமையான மன அழுத்தங்களுக்கு உள்ளாவதையும் அவதானிக்க முடிந்துள்ளது.
அத்துடன் சுகாதார சேவைகளில் பணியாற்றுபவர்கள் மத்தியிலும் கொரோனாத் தொற்று பரவுவதால் நிலைமை மேலும் மோசமடையலாம்.- என்றனர். (ஓ.4)


**University of Jaffna, Sri Lanka**
**WALK-IN-INTERVIEW**

A walk in interview for the post of **Medical Laboratory Technologist** on Assignment basis will be held on **24.08.2021 on Tuesday** at **1.30 p.m** at the Board Room of the University.

**Qualifications:**
A degree in Medical Laboratory Technology / Medical Laboratory Sciences obtained from a recognized University in Sri Lanka and registered as a Medical Laboratory Technologist in the Sri Lankan Medical Council.

OR

Certificate of Competence issued by the Health Department School of Medical Laboratory Technologist or equivalent certificate with 03 years experience and registered under the Sri Lankan Medical Council.

**Age:**
Applicants should be less then 50 years of age.

**Salary** : **Rs.60,000/=** (fixed) per month

Candidates are requested to appear with relevant certificates, NIC and **self prepared applications**.

**Registrar**
**University of Jaffna**
**10.08.2021**


# காயவைத்த நெல்லுக்கு தீ வைத்த விசமிகள்!

### கரும்புள்ளியானில் சம்பவம்

முல்லைத்தீவு,ஓக.11
அறுவடை செய்த நெல்லை காய்தளத்தில் காயவைத்தவேளை, அவற்றுக்கு விசமிகளால் தீ வைக்கப்பட்ட சம்பவம் ஒன்று முல்லைத்தீவு கரும்புள்ளியான் கிராமத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.
தீயில் கருகி 25 மூடை நெல் நாசமாகியுள்ளது என்று பாதிக்கப்பட்ட விவசாயி தெரிவித்துள்ளார்.
கரும்புள்ளியான் கிராமத்தைச் சேர்ந்த பஞ்சலிங்கம் என்ற விவசாயி அறுவடை செய்த கீரி சம்பா நெல்லை கமக்கார அமைப்புக்குரிய நெல் காய்தளத்தில் காயவைத்துள்ளார்.
அதன் பின்னர் மதிய உணவுக்காக அருகில் உள்ள வீட்டுக்குச் சென்ற வேளை இனம் தெரியாத விசமிகளால் நெல் காய்தளத்துக்கு தீ வைக்கப்பட்டுள்ளது.
35 மூடைகள் நெல்லை கொட்டி காயவிட்ட வேளை 25 மூடை எரிந்துள்ளன. இது குறித்து கமக்கார அமைப்புக்கும், விவசாய போதனாசிரியருக்கும் தெரியப்படுத்தியதாக விவசாயி தெரிவித்துள்ளார்.
கரும்புள்ளியான் கிராமத்தில் நடைபெறும் பொதுவான பிரச்சினைகள் தொடர்பில் பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டாலும் எந்த தீர்வும் கிடைக்கவில்லை. அதனால் இச்சம்பவம் தொடர்பில் பொலிஸாரிடம் தாங்கள் முறையிடவில்லை என்று கிராம விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (ஐ19)


# மரண அறிவித்தல்



**நாகலிங்கம் சண்முகலிங்கம்**

இரும்புமதவடி, வதிரி, கரவெட்டியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சண்முகலிங்கம் நேற்று (10.08.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் செல்லம்மா தம்பதியரின் ஏக புதல்வனும், காலஞ்சென்ற முருகேசு செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் ராதாதேவி (கனடா), கணேஸ் (அவுஸ்திரேலியா), இந்துமதி (ஆசிரியை, யா/கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், உபயலிங்கம் (கனடா), Dr.ஜெயந்தினி (அவுஸ்திரேலியா), ரவிச்சந்திரன் (அதிபர், யா/ஆவரங்கால் நடராஜராமலிங்க வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரித்தி (அவுஸ்திரேலியா), சாஜித் (கனடா), சரண் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற தங்கரத்தினத்தின் அன்புச் சகோதரரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.08.2021) புதன்கிழமை மு.ப. 9.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் ஆலங்கட்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வீரணங்கல், வதிரி.**
**077 227 9647**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**


# சீனத் தடுப்பூசியால் இலங்கைக்கு வெற்றி

கொழும்பு,ஓக.11
இலங்கைக்கு தேவையான தடுப்பூசிகளில் 80 வீதமான தடுப்பூசிகளை சீனாவே வழங்கியுள்ளது. தடுப்பூசி செலுத்தும் பணிகளின் வெற்றிக்குப் பின்னால் சீனாவே உள்ளது என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தெரிவித்துள்ளார்.
இலங்கைக்கான சீனத் தூதுவருடன் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
கொரோனா தொற்றுக்குள்ளான நாட்டு மக்களின் உயிர்களைக் காப்பாற்றுவதற்கும், கொரோனா சிகிச்சை நிலையங்கள், மருத்துவனைகளுக்கும் தேவையான அத்தியாவசிய மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்கு சீனா தொடர்ந்தும் உதவும் என்று நம்புகின்றோம். இலங்கையில் கொரோனா வைரஸை ஒழிப்பதற்கு, ஆரம்பத்திலிருந்து சீனா வழங்கி வரும் உதவிகளுக்கும் நன்றி தெரிவிக்கின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ.4)


# மரண அறிவித்தல்

பிறப்பு 30 . 10 . 1934



இறப்பு 10 . 08 . 2021

**வீரசிங்கம் குணரத்தினம்**

சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் கற்பகபிள்ளையார் கோயிலடி உடுவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட வீரசிங்கம் குணரத்தினம் (முன்னாள் மலேரியா தடைப்பகுதி உத்தியோகத்தர்) அவர்கள் நேற்று (10.08.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற வீரசிங்கம் செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா யோகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சத்தியேஸ்வரியின் அன்புக் கணவரும், சாந்தினி, ஜெயந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சரவணபவன், சண்முகராஜாவின் அன்பு மாமனாரும், கணேசவேல், திவ்வியா, பிரசாந்தி, அமிர்தவர்ஷினி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற குலமணி, காலஞ்சென்ற குணவதி, குணேஸ்வரன், குணபாலசந்திரன், குணபாக்கியம் (ராணி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், தேவதாசன், சரஸ்வதி, அற்புதராணி, வைத்தீஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.08.2021) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் இணுவில் பூவோடை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
16 . 04 . 1936

மறைவு
12 . 07 . 2021

### அமரர் சுப்பையா கனகம்மா

வட்டு வடக்கு கற்பகப்பிள்ளையார் கோவிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சுப்பையா கனகம்மா கடந்த (12.07.2021) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி செல்லம்மா ஆகியோரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கிருஷ்ணர் ஆச்சர் ஆகியோரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுப்பையா அவர்களின் மனைவியும், காலஞ்சென்ற சின்னையா மற்றும், பேரம்பலம், வீரசிங்கம், காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் விமலாதேவி, கமலநாயகி, பரமேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பத்மாதேவி இராசலட்சுமி, ஜீவா, மாலா காலஞ்சென்றவர்களான தவராசா, சிவபாதம் மற்றும் சண்முகலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் மீனாம்பிகையின் அன்புத் தாயாரும், பொன்னுத்துரையின் பாசமிகு மாமியாரும் ரங்கநாதன், தேவகி, இரத்தினக்குமார், வாசுகி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், சுகிர்தமலர், கிரீசன், சங்கீதா, பவளேந்திரன் ஆகியோரின் பேர்த்தியாரும், இனிதா, இனிசன், இனிஷ்கா, ஹரிஷ், துளசிகா, கஜேந்தன், வர்ஷியா, கீர்த்திகன், சுகிர்தன், ரூபிகா ஆகியோரின் பூட்டியுமாவார்.

நேரிலும் முகநூல், தொலைபேசி வழியாகவும் அஞ்சலி செலுத்தியோருக்கும் கிரியைகளை சிறப்பாக நடத்திய சிவாச்சாரியார் அவர்களுக்கும் இறுதிக் கிரியைகளின் போது சகல வழிகளிலும் உதவிபுரிந்த அத்தனை அன்பு உள்ளங்களிற்கும் எமது சிரந்தாழ்த்தி நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

**கற்பகப்பிள்ளையார் கோவிலடி,**
**வட்டு வடக்கு, சித்தங்கேணி.**

**குடும்பத்தினர்**

## 31ஆம் நாள் நினைவலைகளில் விழி நீர் சொரிகின்றோம்



மண்ணில்
14 . 07 . 1968

விண்ணில்
12 . 07 . 2021

கடந்த 12.07.2021 இல் இறைபதம் எய்திய
யா/ ஸ்கந்தவரோதய ஆரம்பப்பாடசாலை

**அதிபர் திலகம்**

### அமரர் பொன்னம்பலம் தயானந்தன்

அவர்களின் தூய ஆன்மா நித்தியப் பேரின்பப் பேறடையப் பிரார்த்திக்கின்றோம்.

*தன்னலமில்லாத் தயானந்தன் அதிபரே - ஏனையா!*
*எங்களை விட்டு விண்ணிடை ஏகினாய் விரைந்தே......*
*நேற்று வரை நீங்கள் வாழ்ந்த பாடசாலையில்*
*இன்று நீங்கள் இல்லையே! உங்கள்*
*ஆத்ம ராகங்கள் காற்றோடு கலந்து எங்கள்*
*காதுகளில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன*
*எங்கள் நெஞ்சில் துன்பத்தைச் சேர்த்தபடி*
*நாங்கள் படும் வேதனையைப் போக்க*
*ஓடித்தான் வருவீர்களே! அதிபரே ஓடியோடி வாருங்கள்!*
*கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்*
*எம்முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர்வாழும்*
*மண்விட்டு மறைந்து நீங்கள் விண்ணோக்கிச் சென்றாலும்*
*கண்விட்டு மறையாமல் கனகாலம் இருப்பீர்கள்*
*உங்கள் ஆத்ம சாந்திக்காக ஸ்கந்தப் பெருமானிடம்*
*கையேந்தி நிற்கும் .........*

**பதில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்,**
**யா/ஸ்கந்தவரோதய ஆரம்பப் பாடசாலை**

## மரண அறிவித்தல்



தோற்றம்
10 . 02 . 1947

மறைவு
10 . 08 . 2021

### கந்தையா சிவகாமிப்பிள்ளை

மானிப்பாய் இராஜகாரியர் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவகாமிப்பிள்ளை நேற்று (10.08.2021) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை-அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற சுப்பிரமணியம், நமசிவாயம் (பூபதி), முத்துப்பிள்ளை, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், றஜனி (ஜேர்மனி), றாஜி, றாகினி (கொழும்பு), சுரேஸ் (பிரான்ஸ்), றமேஸ் (சின்னாம்பி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், யோகேஸ்வரன் (ஜேர்மனி), தேவா, கோபால் (கொழும்பு), சோபனா (பிரான்ஸ்), ரூபா ஆகியோரின் அன்பு மாமியாரும், டேவிற்சனின் (கொழும்பு) மைத்துனியும், லலிதா, சாந்தன் (கொழும்பு) ஆகியோரின் ஆசையம்மாவும், அஸ்வினி, ஆர்த்தி, அஸ்விமா (கொழும்பு), கிறிஸ், கரிஸ் (பிரான்ஸ்), கபிசானா, கபினாத் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.08.2021) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் மானிப்பாயில் அமைந்துள்ள இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**இராஜகாரியர் வீதி,**
**மானிப்பாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்,**
**077 6578 575**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



பிறப்பு
15 . 08 . 1946

இறப்பு
08 . 08 . 2021

### திரு. வைரவன் சின்னத்துரை

**(மிசின் குஞ்சர்)**

மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. வைரவன் சின்னத்துரை (குஞ்சர்) அவர்கள் கடந்த (08.08.2021) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரவன் - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், தவசி - சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மருமகனும், யோகரத்தினத்தின் அன்புக் கணவரும், வெள்ளையன், நல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரவிகாந்தன் (சுவிஸ்), ரவிகரன் (லண்டன்), காலஞ்சென்ற ரவிக்குமார் மற்றும் லிலதா (ஆசிரியை கிளி/ பூநகரி நல்லூர் - மகா வித்தியாலயம்), ரவிசீலன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், யசோதா (சுவிஸ்), விஜயநிர்மலா (லண்டன்), சுரேகா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜனிஸ், றிகானா (சுவிஸ்) கேரகன், வாரகன் (லண்டன்), வேணுகன், அர்ணிகா, அர்ணேஸ் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (12.08.2021) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**மருமகன் : 077 711 3060, மகன் : + 41789450009,**
**மகன் : + 447903174597, மகன் : + 41763446863,**
**மகள் : 076 417 4760**

## நல்லூர் பிரதேச சபை கொக்குவில் உப அலுவலகம்

# ஆதனப் பெயர் மாற்றம்

நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் உப அலுவலக பிரிவில் வட்டாரம் - 04. ஆதன இல 37 . பொற்பதி 1ம் லேன் எனும் ஆதனமானது பதிவேட்டில் பொற்பதி விநாயகர் ஆலயத்திற்குரியதாக காணப்படுகின்றது.

மேற்படி விபரமுடைய ஆதனத்தை திரு. சந்திரசேகர ஐயர் ஜெகநாத ஐயர் என்பவர் பிரசித்த நொத்தாரிசு செ.ந. விஸ்வலிங்கம் அவர்கள் முகதாவில் 2309ம் இலக்கத்தில் 26.12.2002 ம் திகதியில் நிறைவேறிய அறுதி உறுதியின் படி ( "குளங்கரை வளவு " நிலப்பரப்பு இரண்டரைக்கு ( நில. பர 2 ½) சொந்தக்காரராக காணப்படுகின்றார்.

குறித்த ஆதனத்தை திரு. நடராஜாஐயர் தியாகராஜா ஐயர் என்பவர் தனது தந்தையாரினது சொந்தமானது என்றும் அவர் மரணிக்க பிதாவழி முதுசமாக தன்னை வந்தடைந்த பிதா வழி முதுசமும் நெடுங்கால ஆட்சியும் என்றும் தந்தையாரது உறுதிகள் இல்லாத நிலையில் சந்திரசேகர ஐயர் ஜெகநாத ஐயருக்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

மேற்படி விடயங்களடங்கிய ஆதனத்தை திரு. சந்திரசேகர ஐயர் ஜெகநாத ஐயர் என்பவர் தனது பெயருக்கு ஆதனவரியை மாற்றுவதற்கு விண்ணப்பித்துள்ளார்.

நல்லூர் பிரதேச சபையின் செயல்பாடுகள் வெளிப்படையான தன்மை கொண்டதாக காணப்படல்வேண்டும் என்பதற்காக குறித்த ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பாக பத்தி ரி கையில் பிரசுரிக்கப்படுகின்றது.


குறித்த ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பாக யாருக்காவது ஆட்சேபனைகள் காணப்படுமிடத்து சரியான ஆவணங்களுடன் எழுத்து மூலமாகவோ அல்லது தொலை பேசியூடாகவோ (தொலைபேசி இல.021 222 2700 தொலைபேசியூடாக ஆட்சேபனை தெரிவித்து ஒரு வாரத்திற்குள் சரியான ஆவணங்கள் சமர்ப்பிக்க வேண்டும்) வெளி நாட்டில் வசிப்பவர்களானால் தங்களது உறவினரூடாகவோ சரியான ஆவணங்களுடன் தங்களது ஆட்சேபனைகள் தெரிவிக்கலாம் என்றும் வெளிப்படுத்து கின்றேன்.

குறித்த ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பாக ஏதும் ஆட்சேபனைகள் கிடைக்கப் பெறாத சந்தர்ப்பத்தில் குறித்த ஆதனவரியை திரு. சந்திரசேகர ஐயர் ஜெகநாத ஐயருக்கு ஆதனப் பெயர் மாற்றம் மேற் கொள்ளப்படும் என்பதையும், இந்த ஆதன பெயர் மாற்றம் மேற் கொள்வதால் வரக்கூடிய எப் பிரச்சனைகளிற்கும் நல்லூர் பிரதேச சபை பொறுப்பாளி இல்லை என்பதனையும் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

**தங்கள் சேவையிலுள்ள,**
**(ப. மயூரன்) தவிசாளர்,**
**நல்லூர் பிரதேச சபை.**

---

## மணி விழா வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்




**யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியில்**
**மணி விழாக் காணும் எங்கள் ஆசிரியர்**

## திருமதி புஷ்பராணி நகுலேஸ்வரன்

(இசைக் கலைமணி சங்கீத கலாவித்தகர்)
(SLTS - I)

**எமது கல்லூரியில் 09.02.2015 தொடக்கம் 06 வருடங்கள் தன் பணியில் சிறந்த நல்லாசிரியராக பணியாற்றி 10.08.2021 அன்று சேவையிலிருந்து** ஓய்வு பெற்றதையிட்டு அவரின் அர்ப்பணிப்பான சேவையை பாராட்டுவதுடன் ஓய்வுக் காலம் மேலும் சிறப்புற மனமுவந்து வாழ்த்துகின்றோம்

**சேவை விவரம்**

01. யா/ இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணியம் வித்தியாலயம் - 01.08.1989 - 28.02.2005
02. யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி - இணைப்பு 06 மாதம்
03. யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி - 2000 - 2002
04. யா/ மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயம் - 29.02.2005 - 08.02.2015
05. யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு ம.க. - 09.02.2015 - 10.08.2021

வாழ்த்துவோர் :

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**
**யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி**

---

# பாராட்டி வணங்கி வாழ்த்துகின்றோம்

(11.08.2021)

**என்றும் அமுதமாய்,**
**எம் இனிய தேவதை!**

## திருமதி புஸ்பராணி நகுலேஸ்வரன்

(ஆசிரியர் - இசைக்கலைமணி, சங்கீத கலாவித்தகர்)




மணிவிழா மணிக்குயில்
மரபிசை மான்விழி
சீரோங்கு வரணி தந்த வரம் - அவர்
வாசல் என்றும் இதம்
கருணை பொங்கும் முகம்
கண்ணகை அம்பிகை அன்பிலே
கலை வளர்க்கும் குருகுலம்
காணம் இசைத்திடும் ஞானக்குயில்
**சின்னத்தம்பி சரஸ்வதியின் செல்ல மகள்**
அத்தனின் ஆர்மோனிய இசையில்
அமுதூறிய தேன் குரல்
சங்கீத வித்வான்
- அமரர் பிரம்ம ஸ்ரீ க. இராமநாதன்
சங்கீத பூஷணம்
- அமரர் திருமதி பூமணி இராசரட்ணம்
ஆகியோரிடத்து புனிதக் கலை பயின்றார்
கண்ணகியை பாடி தினம் கலை பயின்றார்
- பல்கலையில்
இசைக் கலைமணியாகி தென்மராட்சிக்கு இனிய
- ஓர் அரங்கேற்றம் 90 களில்
சின்னஞ் சிறு வயதில் எமை அள்ளி அணைத்தெடுத்து
ஸா - பா சுருதி சேர்த்து சங்கீதம் கற்றுத் தந்தார்
பட்டங்களில் அடங்கிடா, அவர் எமக்களித்த பாடங்கள்
நன்னெறியில் வாழ, வையகம் போற்ற,
- மாணவர் மனம் வாழ்த்த

வாழ்க்கையில் வெற்றிபெற
- கற்றுத்தந்த தெய்வத்தாய்
அன்னையாய் தந்தையாய், அக்காவாய்,
- அனைத்துமாய் நின்ற ஆசான்
வரணியின் இசைப்பாடாசலை
அது ஓர் இனிய கனாக் காலம்
மூன்று சகோதரிகள் ஆறு பாடசாலைகள்
அனைத்து மாணவர்க்கும் அன்றும் இன்றும்
இசை இலவசமாய்
நற் குருவாய் நீர் கிடைக்க
நல்ல தவம் நாம் புரிந்தோம்
இப்பிறப்பில் இசை நல்கி
எழுபிறப்புக் குறை தீர்த்தீர்
வாழ்க எம் ஆசான்
வாழ்க அவர் பதி
நித்தம் மகிழ்ந்து அவர்கள் சித்தம் குளிர்ந்திட
பெற்றெடுத்த முத்துப்பிள்ளைகள் வாழ்கவே
ஞாலமதில் ஞானம் கொண்ட கலை
- பரம்பரையை வளர்க்க
அகிலமதில் ஆயிரம் பிறைகண்டு
அகமும் முகமும் மலர பல்லாண்டு வாழ்கவென
பிறந்த தின நன்நாளில் வணங்கி வாழ்த்துகிறோம்
பாரினில் உம் பணி தொடர்ந்திடவே
பணிகின்றோம் சுட்டிபுரம் அம்மனையே
வாழ்க ! வாழ்க ! பல்லாண்டுகள் வாழ்கவே!

வாழ்த்துவோர்: **என்றும் அன்பு மாணவர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாணப்....

அத்தியாவசிய மற்றும் சுகாதாரப் பணியாளர்களைத் தவிர வேறு எவரும் மாகாண எல்லைகளைக் கடக்க அனுமதிக்கப்படமாட்டார்கள். இந்தத் திட்டம் மிகமிக இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்பட்டு உரிய முறையில் கண்காணிக்கப்படும்.

முன்னர் பரிந்துரைக்கப்பட்ட திருமணத்துக்கு வரும் விருந்தினர்களின் எண்ணிக்கையை 150 பேரில் இருந்து 50ஆக மட்டுப்படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கொரோனா பரவலைத் தடுக்கும் வகையில் மாகாணங்களுக்கு இடையில் பயணக் கட்டுப்பாடுகள் இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன. கடந்த முதலாம் திகதி இந்தப் பயணக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன. இந்தத் தளர்வு நடவடிக்கையால் கொழும்பில் தீவிரமாக உள்ள டெல்டா தொற்று நாடெங்கிலும் பரவ வாய்ப்புண்டு என்றும் இது பெரும் ஆபத்து நிலையை ஏற்படுத்தும் என்றும் எச்சரிக்கப்பட்டது. எனினும் ஆரம்பத்தில் இந்த எதிர்ப்பை அரசு அசண்டையாகவே பார்த்தது. தற்போது தொற்றாளர்களின் எண்ணிக்கை சராசரியாக 2 ஆயிரத்து 500ஐத் தாண்டி வரும் நிலையில் மீண்டும் பயணக் கட்டுப்பாடுகள் இறுக்கமாக்கப்படும் என்று அறிவித்துள்ளார் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா. (ம-22)

## பால்மா....

பேச்சாளரும் அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முற்பகல் அரச தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'சந்தையில் நிலவும் பால்மா தட்டுப்பாடு தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக விடயங்களை ஆராய்ந்து உள்ளூர் சந்தையில் பால்மா விலையை அதிகரிக்காமல், தற்போதுள்ள பால்மா இறக்குமதிக்கான வரி விகிதத்தை திருத்தம் செய்வதன் மூலமோ அல்லது வேறு பொருத்தமான நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலமோ போதியளவு பால்மாவை உள்ளூர் சந்தையில் விநியோகிப்பதை உறுதி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நிதி அமைச்சருக்கு அதிகாரம் வழங்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது. பால்மா இறக்குமதியை கட்டுப்படுத்தி, தேசிய உற்பத்தியை மேம்படுத்துவதே அரசின் எதிர்பார்ப்பாக உள்ளது.

அந்த இலக்கை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதேவேளை, சீனிக்கு சந்தையில் தட்டுப்பாடு நிலவவில்லை' என்றார். (ம-ஒ,44)

## கடலுக்குச்...

நேற்றுமுன்தினம் மாலை கடலுக்குச் சென்றவரே நேற்று இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

உதயபுரம் பகுதியைச் சேர்ந்த மனுவல் செபஸ்டியன் (வயது 65) என்ற நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. (ம-20)

## கொரோனா....

கண்டறியப்பட்டுள்ளது. நாட்டில் கடந்த ஒரு வாரத்தில் தாமதமாகக் கிடைத்த கொரோனாத் தொற்றாளர்களையும் இணைத்து இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது எனச் சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு நேற்றுக் காலை அறிவித்துள்ளது. (ம-22)

## ஜெனிவாத்...

அரசு கவனம் செலுத்தியுள்ளது. இதற்கான நடவடிக்கைகள், நகர்வுகள் தூதரகங்கள் ஊடாக கையாளப்பட்டுவருகின்றன என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முற்பகல் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இதன்போது ஜெனிவாவில் எதிர்வரும் செப்ரெம்பரில் நடைபெறும் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் இலங்கை விவகாரம் மீளாய்வுக்குட்படுத்தப்படவுள்ள நிலையில், அதனை எதிர்கொள்வதற்கு இலங்கை தயாரா என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜெனிவாக் கூட்டத்தொடர் குறித்து அரசு அவதானம் செலுத்தியுள்ளது. வெளிவிவகார அமைச்சும், எமது தூதரகங்களும் இது விடயத்தில் செயற்பட்டுவருகின்றன. அவ்வப்போது பேச்சுகளும் நடத்தப்பட்டுவருகின்றன.

மனித உரிமை விவகாரத்தில் வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட்டுவருகின்றோம். அந்த வகையில் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை வழங்க முடியும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.

ஆனால் விடயதானத்துடன் தொடர்புடாத விடயங்கள் உள்ளடக்கப்படுமானால் அது தொடர்பில் பகிரங்கமாக கருத்து வெளியிடுவதற்கும் தயாராகவே இருக்கின்றோம், என்றார். (ஒ,44)

## கடைசி....

கெஹெலிய ரம்புக்வெல நேற்று செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'கொரோனா நெருக்கடியைத் தீர்ப்பதற்குத் தடுப்பூசி சிறந்த வழியாகக் கருதப்படுகின்றது. அதேபோல், முகக்கவசம் அணிவது மற்றும் சமூக விலகல் உள்ளிட்ட சுகாதார வழிகாட்டுதல்களைப் பொதுமக்கள் பின்பற்ற வேண்டும்.

பொதுமக்கள் சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றத் தவறினால் மாத்திரமே ஊரடங்கு உத்தரவு பரிசீலிக்கப்படும். நாட்டை மூடுவதை அரசு முழுமையாக நிராகரிக்கவில்லை. தேவைப்படும் போது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்' என்றார்.

இந்நிலையில், கொரோனா வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்தச் சில கட்டுப்பாடுகளை விதிப்பது சம்பந்தமாகப் பரிசீலிக்கப்படுகின்றது என அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. நிலைமையை முழுமையாக ஆய்வு செய்த பின் இறுதி முடிவு எடுக்கப்படும் என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-22)

## ஐ.நாவில்...

தோன்றுகின்றது. கடந்த அரசைக் காப்பாற்றுவதற்காக ஐ.நா.வில் பிணையெடுத்த வரலாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஏற்கனவே இருக்கின்றது. அதேபோன்று இந்த அரசைக் காப்பாற்றுவதற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்படப்போகின்றதா என்ற சந்தேகம் தமிழ் மக்களுக்கு எழுந்திருக்கின்றது. இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அரசுடன் பேச்சு நடத்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் முயற்சிப்பதாக பல ஊடகங்களிலும் செய்திகள் வெளியாகியுள்ளன. பேச்சு நடப்பதாக இருந்தால், அது புதிய அரசமைப்பு பற்றிய பேச்சாக இருக்க வேண்டுமென்றும் சம்பந்தன் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் அதனைக் கூறியிருப்பதாகவும் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

### மைத்திரி - ரணில் ஆட்சியில் கூட்டமைப்பினர் சாதித்ததென்ன?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பங்காளியாக இருந்த முன்னைய அரசில் நான்கு வருடங்கள் முயற்சி செய்தும் இவர்களால் ஒரு புதிய அரசமைப்பைக் கொண்டுவர முடியவில்லை. ஒரு புதிய அரசமைப்பை அப்பொழுது கொண்டுவரவேண்டும் என்பதற்காக வடக்கு கிழக்கு இணைப்பை வற்புறுத்துவதைக் கைவிட்டார்கள். வடக்கு கிழக்கில் பௌத்தத்துக்கு முதலிடம் என்பதை ஏற்றுக்கொண்டார்கள். ஒற்றையாட்சிக்குள் சமஷ்டி என்றார்கள். இவ்வளவையும் விட்டுக்கொடுத்தும்கூட ஒரு புதிய அரசமைப்பைக் கொண்டுவருவதிலிருந்து இவர்கள் ஏமாற்றப்பட்டார்கள். இவர்கள் பங்காளியாக இருந்த அரசே இவர்களை ஏமாற்றியிருக்கக்கூடிய சூழ்நிலையில், சிங்கள பௌத்தத்தைக் காப்பாற்றுவதற்காகவே வந்துள்ள புதிய அரசிடம் என்னவிதமான புதிய அரசமைப்பை இவர்கள் எதிர்பார்க்கின்றார்கள்?

### என்ன நம்பிக்கையில் கூட்டமைப்பின் நகர்வு?

தற்போதைய அரசின் ஆட்சிக்காலத்தில் வடக்கு கிழக்கில் நாளாந்தம் புதிது புதிதாக தமிழ் மக்களின் காணிகள் கபளீகரம் செய்யப்படுகின்றன. வடக்கு கிழக்கில் இருக்கின்ற புராதன சின்னங்கள் அனைத்தும் சிங்கள பௌத்த சின்னங்களாக முத்திரை குத்தப்படுகின்றன. புராதான சைவக் கோயில்கள் பௌத்த விகாரைகளாக மாற்றப்படுகின்றன. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் தொடர்ந்தும் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுகின்றார்கள். காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக எத்தகைய நடவடிக்கையையும் மேற்கொள்ள இன்றைய அரசு தயாராக இல்லை. ஜெனிவா தீர்மானங்கள் அனைத்தும் குப்பையில் வீசப்பட்டிருக்கின்றன. மொத்தத்தில் தமிழர்களின் இருப்பே கேள்விக்குள்ளாக்கப்பட்டிருக்கின்றது. இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட 13ஆவது திருத்தத்திலுள்ள அதிகாரங்களே தொடர்ந்தும் பறிக்கப்பட்டு வந்திருக்கின்றன. இவ்வளவற்றையும் செய்யும் அரசிடம் முதலில் இவை அனைத்தையும் நிறுத்துமாறு கோருவதற்கு கூட்டமைப்பு எத்தகைய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கிறது?

இலங்கை அரசு சீனாவுடன் இணைந்துகொண்டு பிரிட்டன், இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு எதிராக செயற்பட்டு தன் தலையில் தானே மண்ணை அள்ளிப் போட்டுக்கொண்டுள்ள சூழலில், அந்த அரசுகளின் கடும் அதிருப்திக்கும் ஆளாகியுள்ளது.

இலங்கை தனது கைகளால் கொள்ளிக் கட்டையை எடுத்து தனது முதுகில் தானே சொறிந்து கொண்டுள்ள நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பசிலுடனான பேச்சு என்பது இலங்கையை மேற்கண்ட நாடுகளின் அழுத்தத்திலிருந்து காப்பாற்றுவதற்காகவா? என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதன் பங்காளிக் கட்சிகளும் இந்த முயற்சிகளின் ஆபத்தை புரிந்துகொண்டு செயற்பட வேண்டும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கேட்டுக்கொள்கிறது. சரியான நேரத்தில் தவறான முடிவெடுப்பதும் தவறான நேரத்தில் சரியான முடிவெடுப்பதும் எப்போதும் ஆபத்தானது, என்றுள்ளது. (ஒ,5)

## சுகாதார....

விக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று முற்பகல் நடைபெற்றது. இதன்போது டெல்டா தொற்று வேகமாக பரவிவருவதால் நாட்டை குறைந்த பட்சம் இரு வாரங்களுக்காவது முடக்குமாறு பல தரப்புகளாலும் விடுக்கப்படும் கோரிக்கை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்தி மக்களை பாதுகாக்கும் நோக்கில்தான் அரசால் வர்த்தமானி அறிவித்தல்கள், சுற்றறிக்கைகள் வெளியிடப்படுகின்றன. இதன் பிரதான நோக்கமும் அதுவே. வேறு எந்த நோக்கமும் கிடையாது. கடந்த காலங்களில் நடைபெற்ற போராட்டங்களை ஒடுக்குவதற்குகூட அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. எனினும், நாட்டு நிலைமையைக்கருதி சுயமாக சிலர் போராட்டங்களை, பேரணிகளை கைவிட்டனர். அதற்காக நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இதற்கு முன்னரும் சில தடவைகள் நாடு முடக்கப்பட்டது. எனினும், முடக்கத்துக்கு பின்னரும் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் நிலைமையே காணப்படுகின்றது. எனினும், பயணக்கட்டுப்பாடு உட்பட சுகாதார தரப்பால் முன்வைக்கப்படும் பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கு அரசு தயாராகவே இருக்கின்றது.

உலக நாடுகளிலும் பயணக்கட்டுப்பாடுகள் நடைமுறையில் உள்ளன. சில நாடுகளில் சுதந்திரம் வேண்டும் என மக்கள் போராட்டம் நடத்துகின்றனர். இது உட்பட அனைத்து காரணிகளையும் கருத்திற்கொண்டு, சுகாதார தரப்பு வழங்கும் ஆலோசனைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு தயார். பரிந்துரை முன்வைக்கப்பட்ட பின்னர் உரிய நடவடிக்கை எடுக்கப்படும், என்றார். (ஒ,44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சியில் கொரோனா தீவிரம்

சாவகச்சேரி,ஓக.11

தென்மராட்சிப் பிரதேசத்தில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. மக்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகின்ற போதிலும், அவர்கள் அலட்சியமாக அக்கறையின்றி செயற்படுவதே அதிகரிப்புக்குக் காரணம் என்று பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவித்துள்ளார். காய்ச்சல், உடல்நோவு, தலையிடி, தொண்டை நோவு, திள் வயிற்றோட்டம், மூச்சு விடுவதில் சிரமம் போன்ற அறிகுறிகள் தென்பட்டாலும், அவர்கள் மருத்துவமனைக்குச் சிகிச்சை பெறச் செல்வதில்லை. இவ்வாறான அறிகுறிகளுடன் இருப்பவர்கள், பலருடனும் பழகுகின்றனர். இதனால் பலருக்கு தொற்று ஏற்பட வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன.

இவ்வாறான அறிகுறிகள் காணப்படின் தாமும், தமது குடும்ப மும். தம்மைத் தாமே சுய தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

பின்னர் கிராம அலுவலர் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு அறிவிக்க வேண்டும். அத்துடன் மருத்துவமனை அல்லது சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகம் போன்றவற்றுக்குச் சென்று அன்டிஜென் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். பிரதேசத்தில் கொரோனாவின் தாக்கத்தை அதிகரிப்பதும், குறைப்பதும் மக்களின் கைகளிலேயே உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4,9)


31ஆம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்



இகம் 14 . 07 . 1968

பரம் 12 . 07 . 2021

திரு. பொன்னம்பலம் தயானந்தன்

(அதிபர், யா/ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலை)

கடந்த 12.07.2021 அன்று அம்பாளின் பாதம் சேர்ந்த எமது அன்புத் தெய்வம் அமரர் பொன்னம்பலம் தயானந்தன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 09.08.2021 அன்று கீரிமலை புனித தீர்த்தக்கரையில் இடம்பெற்றது. வீட்டுக்கிரியைகள் இன்று (11.08.2021) சுகாதார விதிமுறைக்கமைய இடம்பெறும்.

அன்னாரின் பிரிவுச் செய்தியறிந்துநேரில் வந்து அஞ்சலி செலுத்தியோருக்கும், இரங்கல் தெரிவித்தோருக்கும் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"கதிரகம்"
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்.



மரண அறிவித்தல்

பிறப்பு 15 08 1952



இறப்பு 09 08 2021

V.அரியரட்ணம்

ஆண்டவன் அழைத்தவுடன்
அன்புடன் அரவணைத்து
பொக்கிஷமாய் காத்த எம்மிடம்
சொல்லாமலே சென்றுவிட்டீர்களே!
வருவீர்கள் என காத்திருந்த நாம்
ஏமாந்து கண்ணீருடன் உங்கள்
நினைவுகளை சுமந்த வண்ணம்
வாழப்போகிறோம் வாட்டமுடன்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு நீர்கொழும்பை வசிப்பிடமாக கொண்டவருமான V. அரியரட்ணம் 09.08.2021 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை, திருமதி மகேஸ்வரியின் அன்பு மகனும் காலஞ்சென்ற திரு திருமதி ராமநாதன் ஞானாம்பிகை ஆகியோரின் அன்பு மருமகனும் நிர்மலாதேவியின் அன்புக் கணவரும் கஜேந்தினி (U.S.A) ருஷாந்தி (Colombo) நிசாந்தினி (Nertherland) பவதாரணி ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரதீபன் (U.S.A) நகுலேஸ்வரன் (Colombo) பிரசாத் (Nertherland)) ஆகியோரின் அன்பு மாமனாரும் சண்முகராஜா (Negombo) செல்வராஜா (Jaffna) ஆனந்தராஜா (Jaffna) ஸ்ரீஸ்கந்தராஜா (France) தையல்நாயகி (Jaffna) ராதாகிருஷ்ணன் (Negombo) ஆகியோரின் அன்புச் சகோதரனும் மற்றும் நிறஞ்சனாதேவி (Jaffna) ஜெயரஞ்சினிதேவி (Negombo) நந்தினி (Jaffna) ஆகியோரின் மைத்துனரும் மற்றும் காலஞ்சென்ற சித்திரவேல், ரகுநாதன் (Negombo) வரதநாதன் (Jaffna) ஆகியோரின் சகலனும் கஜேந்திராவின் சித்தப்பாவும் மற்றும் அவிஷ்ரா, தஸ்விகா, அவினாஷ், தர்ஸ்விந் ஆகியோரின் அம்மப்பாவும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்

தொடர்பு: 0778583898


# நாள்பட்ட நோயாளர்களுக்கு உயிராபத்து அதிகம்

## மருத்துவர்கள் எச்சரிக்கை



கொழும்பு,ஓக11

நாட்டில் கொரோனாத் தொற்றின் தீவிர நிலைமை நாளுக்கு நாள் அதிகரித்துவரும் நிலையில், ஏனைய நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டவர்களும் எதிர்வரும் வாரங்களில் உயிரிழக்கும் வீதம் அதிகரிக்கக்கூடும் என்று சுகாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட சடுதியான அதிகரிப்பால் மருத்துவமனைகளில் அளவுக்கதிகமான நோயாளர்களால் நெரிசல் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக எதிர்வரும் வாரங்களில் கொரோனா அல்லாத வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்களும் உயிரிழக்கும் வீதம் அதிகரிக்க வாய்ப்புள்ளது. எனவே எவ்வித அச்சமும் இன்றி வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவமனைகளுக்குச் சென்று உரிய காலத்தில் சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (ஒ.4)

# மக்கள் ஒத்துழைக்காவிடில் கொரோனா கட்டுப்படாது

## அமைச்சர் ரோஹித தெரிவிப்பு

கொழும்பு,ஓக.11

மக்கள் ஒத்துழைப்பு வழங்காவிடில், கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த முடியாது என்று துறைமுக அபிவிருத்தி மற்றும் கப்பல் துறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்த அரசு நெருக்கடியான நிலையிலும் பல தீர்மானங்களை எடுத்துள்ளது. தற்போதைய நிலையில் நாட்டை முடக்குவது சாத்தியமற்றது. நாட்டை முடக்கினால் அதன் சுமையை அரசும், மக்களும் எதிர்க்கொள்ள நேரிடும். இதன் காரணமாகவே சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்களுக்கு அமைய நாட்டை முழுமையாக திறக்கத் தீர்மானிக்கப்பட்டது. கடந்த காலங்களை விட தற்போது வைரஸ் தொற்றும் வேகம் பரவலடைந்துள்ளது. எனவே மக்கள் சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்களை கடைப்பிடிக்க வேண்டும்.

கொரோனாவை வெற்றிகொள்வது தற்போது பெரும் சவாலாக காணப்படுகின்றது. நாட்டு மக்களின் ஒத்துழைப்பு இல்லாமல் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையை வெற்றிகொள்ள முடியாது. அரசியல் கட்சி பேதங்களை துறந்து அனைவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.- என்றார். (ஒ.4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள்

**மேடம்:** வாழ்க்கைத்துணைக்கு இன்று லாபங்கள் கிடைக்கும். செலவுகள் முதலீடுகளாகும். ரகசியத்தைக் காப்பாற்றுவீர்கள். பொருளாதாரத்தில் ஏற்றம் இருக்கும். பொறுமை தேவை.

**இடபம்:** ற்செய்தி வரும். பொழுது போக்கில் கவனம் செல்லும். பணிச் சுமை கூடும். முயற்சிகளுக்கு நிறைவான பலன் உண்டு. நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டிவரும்..

**மிதுனம்:** எதிலும் தாமதமான போக்கு காணப்படும். கவலை தீரும். எதிர்பாராத சிக்கல் ஏற்பட்டு பின்னர் சரியாகும். சருமத்தில் சிறு பிரச்சினை ஏற்பட்டு, பிறகு சரியாகும்.

**கடகம்:** பொருள்களைக் கையாளும் போது கவனம் தேவை. வெளி நாட்டு பயண வாய்ப்புகளை ஒத்திப்போட நேரலாம். வம்பினால் வீண் பழி ஏற்படாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

**சிம்மம்:** வியாபாரம் செய்பவர்களுக்கு, எதிர்பாராத செலவு உண்டாகும். எந்த விஷயத்தையும் முடிக்க முடியாமல் திணறிய நிலை மாறும். நண்பர்களுடன் வாக்கு வாதத்தினால் பிரச்சினை வந்து விலகும்.

**கன்னி:** பணியை முடிக்க வேண்டுமே என்று சோம்பல் ஏற்படும். ஆயுதங்களை பயன்படுத்தும்போது மிகுந்த கவனமாக இருங்கள். பிரச்சினையை சாமர்த்தியமாகக் கையாளுவீர்கள்.
..

**துலாம்:** கருத்து வேறுபாடு ஒன்று முடிவுக்கு வந்து நிம்மதியளிக்கும். உடல் நிலையில் அதிக அக்கறை எடுத்துக் கொள்வீர்கள். உறவினர் மத்தியில் உங்களின் முக்கியத்துவம் கூடும்.

**விருச்சிகம்:** சிக்கல் ஒன்றைத் தீர்த்து மற்றவரின் பாராட்டை பெறுவீர்கள். குறை ஒன்று நீங்குவதற்கான நல்ல செய்தி கிடைக்கும். மற்றவரிடையே முக்கிய நபர் என்று பெயர் எடுப்பீர்கள்.

**தனுசு:** சோதனையிலும் அமைதியைக் கடைபிடித்து வெற்றி பெறுவீர்கள். பணியாளர்கள் செய்யும் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். மனச்சோர்வு அதிகரிக்காமல்பார்த்துக்கொள்ளுங்கள்.

**மகரம்:** அயராது பாடுபட்டு முன்னேற்றம் அடைவீர்கள். உங்கள் வார்த்தைகள் பலிக்கும் என்பதால் கவனமாகப் பேசுங்கள். நண்பர்களை அளவோடு அனுமதிப்பது நல்லது.

**கும்பம்:** நல்ல பெயர் எடுக்கப்பாடுபடுவீர்கள். கலையார்வம் வரும். உடல்நலக் கோளாறுகள் நீங்கும். பய உணர்வு தீருவதால் செயலில் ஈடுபாடு அதிகரிக்கும்.

**மீனம்:** செலவுகளுக்கான தடைகள் நீங்கும். பய உணர்வு வேண்டாம். முயற்சியில் சிறு இடையூறு ஒன்று ஏற்பட்டு விலகும். உங்கள் முயற்சிகளை அதிகரிப்பதற்கு ஏற்ப வெற்றி வரும்.



# 'பீஸ்ட்' படத்தில் விஜய்க்கு வில்லனாக செல்வராகவன்

விஜய் நடிப்பில் 65 ஆவது படமாக வெளிவரும் படம் 'பீஸ்ட்'. இந்தப் படத்தை நெல்சன் திலீப்குமார் இயக்குகின்றார். இதில் விஜய்க்கு ஜோடியாக பூஜா ஹெக்டே நடிக்கிறார்.

சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கும் இந்தப் படத்துக்கு அனிருத் இசையமைக்கின்றார்.

இந்த நிலையில், பீஸ்ட் படக்குழுவினரோடு இணைந்துள்ளார் இயக்குநர் செல்வராகவன் இதனை சன் பிக்சர்ஸ் நிறுவனம் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

இப்படத்தில் செல்வராகவன் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கவுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

படங்கள் இயக்குவதில் கவனம் செலுத்திவந்த செல்வராகவன், தற்போது நடிப்பிலும் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளார்.







# மரண அறிவித்தல்



**தோற்றம்**
**28.10.1939**

**மறைவு**
**10.08.2021**

## திருமதி மணிமேகலை பொன்னம்பலம்

(ஓய்வு பெற்ற ஆசிரியை)

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் குப்பிளானை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மணி மேகலை பொன்னம்பலம் நேற்று (10.08.2021) செவ்வாய்க் கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை சின்னாச்சிபிள்ளை தம்பதிகளின் பாசமிகு மருமகளும், பொன்னம்பலம் அவர்களின் அன்பு மனைவியும், மலர்விழி (லண்டன்), மணிவண்ணன் (லண்டன்), மதிவதனி (லண்டன்), மணிசேகரன் (லண்டன்), மதியரசி (பிரான்ஸ்), காலஞ்சென்ற மங்கையர்க்கரசி ஆகியோரின் பாசமிகு தாயாரும், இளங்கோ (லண்டன்), தமயந்தி (லண்டன்), நிதர்சன் (லண்டன்), ருசாந்தி (லண்டன்), ஜெயகணேஷ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான கௌரியம்மா, ஆனந்தசிவம், ஆனந்தவேல், தேவகுஞ்சரி மற்றும் சத்தியவாணி, சாரதாமணி, இந்திராணி, ரோஹிணி, தேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பொன்னுப் பிள்ளை, சின்னம்மா, நாராயணப்பிள்ளை, சொர்க்கலிங்கம் மற்றும் தருமலிங்கம், மகாலிங்கம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பொன்மணிவாசா
மிந்திரை வீதி,
குப்பிளான் தெற்கு,
ஏழாலை

தகவல்:
பொன்னம்பலம் (கணவர்)
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
தொடர்பு : 076 242 0026, 021 224 3365

### இதயவன்

எந்தப் புத்தகமும்
வாய் திறந்து பேசாது
ஆனால் ஏதோ ஒரு குரல் புத்தக
வாசிப்பிலிருந்து
ஒலித்துக் கொண்டேயிருக்கும்

### மெத்த வீட்டான்

பாரதி கண்ணம்மாக்கு அப்பறம்
நம்ம வாத்தியார் தான்
உலகத்தையே சுத்திருக்காரு..
என்ன ஒரே ஒரு வித்தியாசம்,
கண்ணம்மா தனியா நடந்தே
சுத்துச்சு.. இவரு கபிலன் கூட
சைக்கிள் ல சுத்துறாரு..

# செவ்வாய் கிரகம் செல்ல நாசா இலவச பயிற்சி



செவ்வாய் கிரகம் போன்ற சூழலில் தங்கியிருந்து பயிற்சி பெற பொதுமக்களுக்கு நாசா அழைப்பு விடுத்துள்ளது.

அமெரிக்க விண்வெளி நிறுவனமான நாசா செவ்வாய்க்கு மனிதர்களை அனுப்புவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இதற்காக செவ்வாய்க் கிரகத்தில் சேகரிக்கப்பட்ட தரவுகளை கொண்டு ஹூஸ்டன் அருகே செயற்கையாக செவ்வாய் கிரகம் போன்ற சூழலை நாசா உருவாக்கியுள்ளது.

இந்த சூழலில் மனிதர்கள் வசிக்க முடியுமா என்பது குறித்து ஆராய அந்த செயற்கை அமைப்பில் தங்கி பயிற்சிபெற தன்னார்வலர்களுக்கு நாசா அழைப்பு விடுத்துள் ளது. இதில் அமெரிக்க குடிமக்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும் என்றாலும் பலர் ஆர்வமுடன் விண்ணப்பித்து வருகின்றனர் எனக் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்களுக்கு ஒரு வரப்பிரசாதம் மாசிக்காய் பொடி...!!!

பெண்களுக்கே உண்டான ஒரு இயற்கை வரம் தாய்மை ஆகும். பெண்களுக்கு மாதந்தோறும் வெளியேறும் மாதவிடாய் சம்பந்தமான பிரச்சனைகளுக்கு இந்த மாசிக்காய் பொடியை தேன் அல்லது நெய்யில் கலந்து சாப்பிட்டு வர மாதவிடாய் காலத்தில் அதிக இரத்தபோக்கு ஏற்படுவது நிற்கும்.

கருப்பையில் இருக்கும் அழுக்குகள், நச்சுக்கள் நீங்கும். கருப்பை பலம் பெறும்.

மாசிக்காய் பொடியை குடிநீரில் கலந்து வாய்கொப்பளித்து வர நாக்கில் இருக்கும் புண்கள் ஆறும்.

மாசிக்காய் பொடியை தண்ணீர் விட்டு நன்கு குழைத்து மலவாசலில் மூல நோய் பாதிப்பால் ஏற்பட்ட புண்கள், கட்டிகள் போன்றவற்றின் மீது தடவி வர சிறந்த நிவாரணம் அளிக்கும்.

தேமல், படை, சொறி, சிரங்கு போன்றவற்றின் மீதும் மாசிக்காய் பொடியை தினமும் நீரில் குழைத்து தினமும் தடவி வர நல்ல குணம் கிடைக்கும்.

மாசிக்காய் பொடியை ஒரு சிட்டிகை அளவு எடுத்து அதை தேனில் கலந்து ஒரு நாளைக்கு மூன்று வேளை சாப்பிட்டு வந்தால் வயிற்று போக்கு குணமாகும். டொன்சில்ஸ், இருமல், தொண்டைக்கட்டு மற்றும் தொண்டை வலி போன்ற பிரச்சனைகள் நமது சுவாசப் பாதைகளில் பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது. மாசிக்காய் பொடியை, கற்பூர வள்ளி இலை சாற்றுடன் கலந்து சாப்பிட இப்பிரச்னைகளிலிருந்து சிறந்த நிவாரணம் கிடைக்கும்.

# சோயா பீன்ஸ்சில்

## இருக்கும் ஆரோக்கியம்


உடலில் உள்ள கொலஸ்ட்ரால் அளவைக் குறைக்கும். பெண்களுக்கு ஹோர்மோன் பிரச்சினைகளைப் போக்கும்.

ஒமேகா 3, பீட்டாகரோட்டின், பொஸ்பரஸ் அதிகம் இருக்கின்றன.

புரதச்சத்து, கல்சியம் கிடைக்கும்.

வளரும் குழந்தைகளுக்கு மிகவும் நல்லது.








# இடுப்பு மற்றும் முதுகு ஆரோக்கியத்துக்கு..

1. சுருண்டு படுக்காதீர்கள்.
2. உட்காரும்போது வளையாதீர்கள்.
3. நிற்கும்போது நிமிர்ந்து நில்லுங்கள்.
4. கனமான தலையணைகளை தூக்கி எறியுங்கள்
5. டூவீலர் ஓட்டும்போது குனிந்து ஓட்டாதீர்கள்.
6. தினமும் 23 நிமிடங்கள் வேகமாக நடவுங்கள். தொடர்ந்து 70 நிமிடங்களுக்கு மேல் உட்காராதீர்கள்.
7. தினமும் 21 முறையாவது குனிந்து காலைத்தொட்டு நிமிருங்கள் பளுவான பொருள்களை தூக்கும்போது குனிந்து தூக்காதீர்கள்.
8. தினமும் காலை மாலை 20 முறை கைகளை ஆகாயத்தை நோக்கி நீட்டுங்கள்

# ஆரோக்கியம் பேண டிப்ஸ்...



**மார்பு சளி நீங்க...**

மார்பு சளி தீராமல் இருமல், தொண்டை வறண்டுதல் போன்ற பிரச்சினை ஏற்படலாம். ஒரு ஆளுக்கு ஐந்து மிளகு, அரை ஸ்பூன் சீரகம், ஐந்து வெற்றிலை இதையெல்லாம் தண்ணீரில் கொதிக்க வைத்து விட்டு வடிகட்டி நன்கு குடித்துவர மார்பு சளி கரைந்து மாயமாகும்.

**முகம் பளபளப்பாக இருப்பதற்கு:**

ஆவாரம் பூ, கடலைமாவு இரண்டையும் சமமாக எடுத்து பசும் பாலில் அரைத்து முகத்தில் தேய்த்து ஒரு மணி நேரம் கழித்து இளம் சூட்டில் கழுவி சுத்தமான மெல்லிய துணியால் துடைத்து எடுக்க முகம் பளபளப்பாகும்.

**குடி போதை மறக்க:**

மிளகாய்ச் செடி, இலவங்கபட்டை, சர்க்கரை, நெல்லிக்காய்தூள், கொத்தமல்லி, ஆகிய பொருள்களை வாழைச்சாற்றுடன் சேர்த்து காலை, மாலை, 100 மில்லி அளவு குடித்துவர 30 நாள்களில் பலன் கிடைக்கும்.

**கால் ஆணிக்கு மருந்து**

வசம்பு, சுட்டு எடுத்த மஞ்சள், மருதாணி இலை இவைகளை சமமாக எடுத்து மைபோல் அரைத்து கால் ஆணிகளில் கட்டிவர குணமாகும்.

**தலை பொடுகு போக**

50 கிராம் வேப்பம் பூவை உரலில் போட்டு இடித்து, 250 மில்லி தேங்காயெண்ணெய் சேர்த்து காய்ச்சி தலையில் வருடி தேய்த்து வர பொடுகு ஒழியும்.

**தலைவலி நீங்க**

இஞ்சியை அரைத்து அதனை நீரில் கொதிக்க விடவும். அதில் 1 தேக்கரண்டி தேனை கலந்து பருகவும்.

# நீரிழிவு நோய்க்கு மிகச்சிறந்த இயற்கை மருந்து

# உமிழ்நீர்

உமிழ்நீர் எனும் இயற்கை மருந்தை நம் முன்னோர்கள், தாங்கள் உண்ணும் உணவுடன், அதிக அளவு எடுத்துக்கொண்டனர். வாழ்வதற்காக உண்டனர். உண்பதற்காக வாழ்ந்தனர். அதனால்தான் பொறுமையுடனும், அமைதியுடனும், பொறுப்புடனும் உணவு சாப்பிட்டனர். அதனால் அவர்கள் சாப்பிடும் உணவுடன் உமிழ்நீர் அதிக அளவு கலந்து வயிற்றுக்குள் சென்றது. கூடுதல் உமிழ்நீரை சுரக்கச் செய்வதற்காக ஊறுகாயைச் சிறிதளவு எடுத்துக் கொண்டனர்.

நம் முன்னோர்களுக்கு உமிழ்நீரின் அருமை தெரிந்திருந்ததால் ஊறுகாய் என்ற உணவுப் பொருளை கண்டுபிடித்துப் பயன்படுத்தினர். தூண்டல், துலங்கல் என்ற விதியின் படி உமிழ்நீர் என்ற தூண்டுதலால் இன்சுலின் என்ற துலங்கல் சுரக்கப்படுகிறது.


நமது வாழ்க்கையின் வேகம் அதிகரித்துவிட்டது. உணவு சாப்பிடும் வேகமும் அதிகரித்துவிட்டது. வாழ்க்கைக்கான சாப்பாடு என்ற மனநிலை மாறி, சாப்பிடுவதும் ஒரு 'வேலை'தான் என்ற மனநிலைக்கு வந்துவிட்டோம்.

உணவை ரசித்து, ருசித்து, உமிழ்நீர் கலந்து சாப்பிடாமல், அவசர அவசரமாக வாயில் போட்டு விழுங்குகிறோம். நாம் விழுங்கும் உணவில் உமிழ்நீர் இல்லாததால், அந்த உணவுக்கு இன்சுலின் சுரக்காது. உணவிலுள்ள குளுக்கோஸ், கிளைக்கோசனாக மாறாமல், அது சர்க்கரையாகவே இரத்தத்தில் தங்கிவிடும். நாளடைவில் அது சர்க்கரை நோய் என்று அழைக்கப்படும் நீரிழிவு நோயாக மாறிவிடுகிறது.

நாம் சாப்பிடும்போது உணவை மெதுவாக மென்று ரசித்து, ருசித்து, சாப்பிட வேண்டும் அப்போது இயற்கையாக உமிழ்நீர் சுரக்கும். கூடுதலாக உணவு செரிமானமும் சிறப்பாக நடக்கும். ஜீரணக் கோளாறு என்ற பேச்சுக்கே இடம் இல்லை. நோயற்ற வாழ்வு வாழலாம். குடிதண்ணீர், குளிர் பானம், கூழ், சூப், தேநீர் அருந்தினால் கூட உமிழ்நீருடன் கலந்து வயிற்றுக்குள் போகிறபடி மெதுவாக ரசித்து, ருசித்து அனுப்ப வேண்டும்.

108 வியாதிகளுக்கும் இதுவே மருந்தென்றால் மிகை அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தக்க சமயத்தில் உதவி செய்வோம்

படகு ஒன்றுக்கு பெயின்ட் அடிப்பதற்கான பொறுப்பு ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

அவர் ப்ரஷ், பெயின்ட் என்பவற்றைக் கொண்டுவந்து படகு உரிமையாளர் வேண்டிக் கொண்டதைப் போலவே பிரகாசமான சிவப்பு நிறத்தில் பெயின்ட் அடித்துக்கொடுத்தார்.

பெயின்ட் அடித்துக் கொண்டிருக்கும்போது அந்தப் படகில் ஒரு சிறிய ஓட்டை இருப்பதை அவதானித்து, உடனடியாகவே அந்த ஓட்டையை சரிவர அடைத்தும் விட்டார்.

வேலை முடிந்ததும் அவர் தனக்குரிய கூலியை வாங்கிக்கொண்டு சென்றுவிட்டார்.

அடுத்த நாள் படகின் உரிமையாளர் அந்த பெயின்டரின் வீடு தேடி வந்து ஒரு பெறுமதிமிக்க காசோலையை கொடுத்தார். அது அவர் ஏற்கனவே கூலியாக வழங்கிய தொகையைப் பார்க்கிலும் பன் மடங்கு அதிகமானது.


பெயின்டருக்கோ அதிர்ச்சி. " நீங்கள் தான் ஏற்கனவே பேசிய கூலியைத் தந்துவிட்டீர்களே? எதற்காக மீண்டும் இவ்வளவு பணம் தருகிறீர்கள்? என்று கேட்டார் பெயின்டர்.

" இல்லை. இது பெயின்ட் அடித்ததற்கான கூலி அல்ல. படகில் இருந்த ஓட்டையை அடைத்ததற்கான பரிசு" என்றார் படகின் உரிமையாளர்.

" இல்லை சேர்... அது ஒரு சிறிய வேலை. அதற்காக இவ்வளவு பெரிய தொகைப் பணத்தை தருவதெல்லாம் நியாயமாகாது. தயவுசெய்து காசோலையை கொண்டுசெல்லுங்கள்" என்றார் பெயின்டர். " நண்பரே... உங்களுக்கு விடயம் புரியவில்லை. நடந்த விடயத்தைச் சொல்கிறேன் கேளுங்கள்" என்று சொல்லி விட்டு படகு உரிமையாளர் தொடர்ந்தார்.

" நான் உங்களை படகுக்கு பெயின்ட் அடிக்கச் சொல்லும்போது அதில் இருந்த ஓட்டை பற்றிச் சொல்ல மறந்துவிட்டேன். பெயின்ட் அடித்துவிட்டு நீங்களும் போய்விட்டீர்கள். அது காய்ந்த பிறகு எனது பிள்ளைகள் படகை எடுத்துக்கொண்டு மீன் பிடிக்கக் கிளம்பிவிட்டார்கள். படகில் ஓட்டை இருந்த விடயம் அவர்களுக்குத் தெரியாது. நான் அந்த நேரத்தில் அங்கு இருக்கவுமில்லை. நான் வந்து பார்த்த போது படகைக் காணவில்லை. படகில் ஓட்டை இருந்த விடயம் அப்போதுதான் நினைவுக்கு வர நான் பதறிப் போய்விட்டேன். கரையை நோக்கி ஓடினேன். ஆனால் எனது பிள்ளைகளோ மீன் பிடித்து விட்டு மகிழ்ச்சியாக திரும்பிவந்து கொண்டிருந்தார்கள். அந்தக் கணம் எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் நிம்மதிக்கும் அளவேயில்லை. உடனே படகில் ஏறி ஓட்டையைப் பார்த்தேன். அது நேர்த்தியாக அடைக்கப்பட்டிருந்தது. இப்போது சொல்லுங்கள். நீங்கள் செய்தது பெறுமதியற்ற சிறியதொரு வேலையா? நீங்கள் என்னுடைய பிள்ளைகளின் விலைமதிக்க முடியாத உயிர்களையல்லவா காப்பாற்றியிருக்கிறீர்கள்? உங்களது இந்தச் 'சிறிய' நற்செயலுக்காக நான் எவ்வளவுதான் பணம் தந்தாலும் ஈடாகாது." என்றார்.

## வர்ணம் தீட்டுவோம்



# திருக்குறள்

**செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்ற லரிது.**

தான் ஓர் உதவியும் முன் செய்யாதிருக்கப் பிறன் தனக்கு செய்த உதவிக்கு மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும் கைமாறாகக் கொடுத்தாலும் ஈடு ஆக முடியாது.

**காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது.**

உற்ற காலத்தில் ஒருவன் செய்த உதவி சிறிதளவாக இருந்தாலும், அதன் தன்மையை அறிந்தால் உலகைவிட மிகப் பெரிதாகும்.

**மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க துன்பத்துள் துப்பாயார் நட்பு.**

குற்றமற்றவரின் உறவை எப்போதும் மறக்கலாகாது: துன்பம் வந்த காலத்தில் உறுதுணையாய் உதவியவர்களின் நட்பை எப்போதும் விடாலாகாது .

**எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண் விழுமந் துடைத்தவர் நட்பு.**

தம்முடைய துன்பத்தைப் போக்கி உதவியவரின் நட்பைப் பல்வேறு வகையான பிறவியிலும் மறவாமல் போற்றுவர் பெரியோர்.

**நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது அன்றே மறப்பது நன்று.**

ஒருவரர்முன்செய்த நன்மையை மறப்பது அறம் அன்று; அவர் செய்த தீமையைச் செய்த அப்பொழுதே மறந்து விடுவது அறம்.

## அறிந்து கொள்வோம்

01. விண்வெளிக்கு முதல் முதலில் சென்ற மிருகம் எது?
நாய்

02. கொசு ஒழிப்பு தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?
ஒக்ரோபர் 20

03. பற்களே இல்லாத மிகப்பெரிய பாலூட்டி எது?
நீலத் திமிங்கிலம்


04. .நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு எது?
நோர்வே

05. ஒலியை அளக்க உதவும் அலகு எது?
டெசிபல்

06. உலகில் பால் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு எது?
இந்தியா

07. தமிழ் மொழியில் வெளியான முதல் நாளிதழ் எது?
சுதேசமித்திரன்

## கோதுமை



1. உலகில் அதிகம் பயிரிடப்படும் உணவு தானியமாக கோதுமை உள்ளது.
2. உலகெங்கிலும் 544.6 மில்லியன் ஏக்கர்களில் கோதுமை பயிரிடப்படுகிறது.
3. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு மத்திய கிழக்கு நாடுகளில் முதல் முறையாக கோதுமை பயிரிடப்பட்டதாக கூறப்படுகிறது.
4. அமெரிக்காவில் 1777ஆம் ஆண்டில்தான் முதன்முதலில் கோதுமை பயிரிடப்பட்டது.
5. அன்டார்டிகாவைத் தவிர அனைத்து கண்டங்களிலும் கோதுமை விளைகிறது.
6. கோதுமையை விதைத்த பிறகு அறுவடை செய்வதற்கு 130 நாட்கள் வரை ஆகும்.
7. உலகெங்கிலும் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கோதுமை வகைகள் இருப்பதாக கூறப்படுகிறது.
8. உலகிலேயே சீனாவில்தான் அதிக அளவில் கோதுமை விளைவிக்கப்படுகிறது. இதற்கு அடுத்த இடத்தில் இந்தியாவும், ரஷ்யாவும் உள்ளன.
9. மருத்துவப் [illegible] ஜின் போன்ற மது வகைகளைத் தயாரிக்கவும்கூட கோதுமை பயன்படுத்தப்படுகிறது.

## சரியான பகுதியை கண்டுபிடிப்போம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லையில் நெல் உற்பத்தி குறைய நிலம் உவராகின்றமையே காரணம்

## செய்கையாளர்கள் ஒத்துழைத்தால் இதை மாற்றலாம் பிரதி மாகாண விவசாய பதில் பணிப்பாளர் தெரிவிப்பு




**முல்லைத்தீவு, ஓக. 11**

**முல்லைத்தீவு மாவட்டத்தில் 24 ஆயிரம் ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற்செய் மேற்கொள்ளப்படுகின்றபோதும், உற்பத்தி குறைவதற்குக் காரணம் வயல்நிலங்கள் உவர்த்தன்மையாகக் காணப்படுகின்றமையே என்று முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாய பதில் பணிப்பாளர் யாமினி சசீலன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:
இங்கு பெரும் போகத்தில் 21ஆயிரம் ஹெக்ரேயர் நிலப்பரப்பிலும், சிறுபோகத்தில் 6ஆயிரத்து 150 ஹெக்ரேயர் நிலப்பரப்பிலும் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
மாவட்டத்தில் 983 ஏக்கர் விவசாய நிலப்பரப்பு உவர் நிலப்பகுதிகளாக மாறியுள்ளன.
மாவட்டத்தில் கடல் நீர் ஏரியை அண்மித்த பகுதிகளான முத்தையன்கட்டு, அளம்பில், தண்ணிமுறிப்பு, குமுழமுனை, சிலாவத்தை, கேப்பாபிலவு, வாரிவெட்டி, மந்துவில், நந்திக்கடல்வெளி, கோம்பாவில், இரணைப்பாலை, பொக்கணை, கொக்குத்தொடுவாய், எரிந்தகாடு, கொக்கிளாய், முள்ளியவளை, வற்றாப்பளை, முள்ளிவாய்க்கால் மேற்கு, கிழக்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 983 ஏக்கர் வயல் நிலங்களே உவர் நிலங்களாக மாறியுள்ளன.
கடந்த மூன்று ஆண்டுகளாக உவர் நிலத்தைநீக்கி நெற்பயிர் செய்கையை ஊக்குவிப்பதற்காக சில முன்மாதிரி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
கருக்கிய உமி, சேதனப்பசளைகளை பாவிப்பதன் மூலம் இதன் உவர் தன்மையை நீக்கி சாதாரண விளைச்சலுக்கு பெறக்கூடியதாக இருக்கின்றது.
இனிவரும் காலபோகத்துக்கு 983 ஏக்கரையும் உவர் தன்மையில் இருந்து மாற்றுவது கடினமான விடயம்.
எனினும், அதில் அரைவாசி பகுதியிலாவது உவர்த்தன்மையைநீக்கி நெற்செய்கை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம்.
விவசாயிகள் விவசாய திணைக்களத்துக்கு அதிகளவு ஒத்துழைப்புத் தருவார்களாயின், உவர் தன்மையை நீக்கி உற்பத்தித் திறனை அதிகரிக்கலாம். -என்றார்.

(த-19)



# வவுனியாவில் 24 பேருக்கு கொரோனாத் தொற்று

வவனியா, ஓக. 11
வவுனியா மாவட்டத்தில் 24 பேருக்கு கொவிட் தொற்று உள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.
வவுனியாவில் அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை ஆகியவற்றின் முடிவுகள் சில வெளியாகின.
அதில் பாவக்குளம் பகுதியில் ஒருவருக்கும், பொலிஸார் இருவருக்கும், மதவாச்சி, நெளுக்குளம், கூமாங்குளம், நெடுங்குளம், சண்முகபுரம், மெனிக்பாம், தோனிக்கல் மற்றும் அம்பேபுவே பகுதிகளில் தலா ஒருவருக்கும், கல்மடு பகுதியில் இருவருக்கும், கல்குண்டாமடு பகுதியில் ஐவருக்கும், கனகராயன்குளம் பகுதியில் நால்வருக்கும், நேரியகுளம் பகுதியில் இருவருக்குமாக 24 பேருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
இந்த நிலையில் தொற்றாளர்களை கொவிட் சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புகளைப் பேணியோரை தனிமைப்படுத்தவும் சுகாதாரத் துறையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(ஐ-18)

# கூட்டுறவை விருத்திசெய்து நியாய விலையில் பொருள்கள் கோபா குழுத்தலைவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்



கொழும்பு, ஓக. 11
கூட்டுறவு முறையை விருத்திசெய்து நாடு முழுவதும் நியாயமான விலையில் அத்தியாவசிய பொருள்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரச கணக்குகள் குழுவின் (கோபா) தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.
கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் செயற்பாடுகளை மதிப்பாய்வு செய்வதற்கு அரச கணக்குகள் குழு நாடாளுமன்றில் கடந்த புதன்கிழமை கூடியது. அதன்போதே அவர் இந்த அறிவுறுத்தலை விடுத்தார் என்று நாடாளுமன்ற பணிப்பாளர் (தொடர்பாடல்) ஷான் விஜயதுங்க ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.
கடந்த காலங்களில் கூட்டுறவு முறைமை இந்தநாட்டில் மிகவும் செயற்திறனாக செயற்பட்டது. தற்போது அந்த நிலைமை இல்லாமல் போயுள்ளது.
விசேடமாக விவசாய கூட்டுறவு மற்றும் நுகர்வோர் கூட்டுறவுக்கிடையிலான தொடர்பை அதிகரித்து ஒரு சில உற்பத்திகளை நேரடியாக மக்கள் மத்தியில் கொண்டுசெல்லவேண்டும்.

**நியாய விலை**

அதேபோன்று, பருப்பு, சீனி, அரிசி மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்களை முறையான வேலைத்திட்டமொன்றின் மூலம் நியாயமான விலைக்கு வழங்க முடியும்.
தற்போதைய சட்டரீதியான பின்னணியில் அதனை உடனடியாக செயற்படுத்துவதில் அசௌகரியங்கள் காணப்படுகின்றன என்று கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.
இது தொடர்பில் புதிய சட்டங்களை தயாரித்து உரிய தரப்பினருக்கு பரிசீலனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் கோபா குழுவுக்கும் இந்த வரைபுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.
இதன்மூலம் மாகாண சபைகள் மற்றும் மத்திய அரசுக்கிடையில் ஏற்பட்டுள்ள ஒரு சில முரண்பாடுகளை குறைக்கவும், ஊழல் மோசடிகளின்போது அதிகாரிகளுக்கு வழங்கப்படும் தண்டனைகள் தொடர்பில் விளக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.
இதேவேளை, இது தொடர்பில் ஏற்கனவே வினைத்திறனான முறையில் வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.

**அரிசி, பருப்பு இறக்குமதி?**

அதேபோன்று, ஆஸ்திரேலியாவிலிருந்து சிவப்பு பருப்பு மற்றும் இந்தியாவிலிருந்து சீனி என்பவற்றை இறக்குமதி செய்வதற்கு பேச்சு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பேச்சு வெற்றியடைந்தால், கூட்டுறவு மூலம் அவசரமாக சலுகை விலையில் சீனி மற்றும் பருப்பு என்பவற்றை வழங்க முடியும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

**கணினிமயம் இன்னுமில்லை**

மேலும், கூட்டுறவு கிராமிய வங்கிகளை கணினிமயப்படுத்துவது தொடர்பில் இதற்கு முன்னர் இடம்பெற்ற கோபா குழுவில் ஆலோசனை வழங்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்காமை குறித்து கோபா குழுத்தலைவர் அதிகாரிகளிடம் வினவினார். ஒப்பந்தக்காரர்களின் சிக்கல் காரணமாக இது கைவிடப்பட்டுள்ளது என்றும் அதனை முறையாகவும் துரிதமாகவும் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

**வழக்குபோடமுடியாது**

அதேபோன்று, கட்டட பொருள்கள் கூட்டுத்தாபனத்துக்கு 2013 ஆம் ஆண்டில் ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்ட கடன் மற்றும் வட்டி அறவிடப்படாமை குறித்து குழுவின் கவனம் செலுத்தப்பட்டது. இது தொடர்பில் கடன் மற்றும் வட்டி இதுவரை கிடைக்கப்பெறவில்லை என்றும் தற்போதைய சட்டதிட்டங்களுக்கு அமைய அரச நிறுவனமொன்றுக்கு எதிராக வழக்குத் தொடர முடியாது எனவும் இதனால் பிரச்சினை உள்ளது எனவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

(த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அதிகரித்துள்ள கொரோனாத் தொற்று

# சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக கடைப்பிடிக்கவும்

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சரவணபவன் தெரிவிப்பு

கிளிநொச்சி,ஓக.11

நாட்டில் தற்போது அதிகரித்துள்ள கொரோனாத் தொற்றுக் காரணமாக பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக கடைப்பிடித்து நடந்துகொள்ள வேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சரவணபவன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது கொவிட் 19 தொற்று நிலைமை அதிகரித்துள்ளது. குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்திலும் இந்த தொற்று நிலைமை கடந்த வாரத்தில் பெறப்பட்ட முடிவுகளின் படி அதிகரிப்பை காட்டி நிற்கின்றது குறிப்பாக ஒரு நாளில் 60 க்கு மேற்பட்டவர்கள் தொற்றாளர்களாக அடையாளம் காணப்படுகின்றனர்.

**இதற்கு மக்களின் அசண்டையீன**மான செயற்பாடே காரணமாகும்.

பொதுமக்கள் வீடுகளில் இருந்து வெளியேறுவதை தவிரித்துக்கொள்ளல் வேண்டும். ஒருவர் மாத்திரம் வெளியில் செல்வதை நடைமுறைக்கு கொண்டு வருதல் வேண்டும். சுகாதார முறைகளை இறுக்கமாக கடைப்பிடித்து பொது நிகழ்வுகளை தடைசெய்ய வேண்டும். அத்துடன் மரண நிகழ்வுகளில் அதிகளவில் மக்கள் கூடுவதனை தவிர்க்க வேண்டும்.

மாவட்டத்தில் அண்மையில் 50 ஆயிரம் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றன. குறித்த ஊசிகள் செலுத்தும் நடவடிக்கை நிறைவு கட்டத்தை எட்டியுள்ளது- என்றார். (ஐ-6)



# ரயில் கொத்தணி உருவாகும் அபாயம்

கொழும்பு,ஓக.11

ரயில் சேவையாளர்களில் பெரும்பாலானோர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி இருப்பதால், ரயில் கொத்தணி தோற்றம் பெறும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று ரயில் நிலைய அதிபர் சங்கத்தின் செயலாளர் கசுன் சாமர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ரயில் கட்டுப்பாட்டு காரியாலய சேவையாளர்கள் , ரயில் நிலையப் பொறுப்பதிகாரிகள் உள்ளிட்ட சேவையாளர்களில் 12 பேர் இதுவரை வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

அத்துடன் பலர் சுய தனிமைப்படுத்தலில் உள்ளனர்.

களுத்துறை, இதுருவ, கொலன்னாவ ஆகிய ரயில் நிலையங்களில் சேவையாற்றுபவர்களில் பெரும்பாலானோர் வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

இந்த நிலையில் போக்குவரத்துச் சேவையை சிறந்த முறையில் முன்னெடுத்து செல்வதற்கான பொருத்தமான திட்டத்தை ரயில் திணைக்களம் இதுவரையில் அறிமுகப்படுத்தவில்லை.

சுகாதாரப் பாதுகாப்புக் கருவிகள் முழுமையாக வழங்கப்படவில்லை. இவ்வாறு பாதுகாப்பற்ற வகையில் ரயில் சேவை தொடர்ந்தால் ரயில் கொத்தணி உருவாகுவதற்கு வாய்ப்புள்ளது. என்றார். (ஒ.4)

# வரலக்ஷ்மி விரதம்

யாழ்ப்பாணம்,ஓக.11

வரலக் ஷ்மி விரதத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வட

கிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

வரலக்ஷமி விரதம் எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிமை நடை

பெறவுள்ளது. அன்றையதினம் பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகி மூலமூர்த்தி பூசை, மஹாலக்ஷமி அம்பாளுக்கு விசேட பூசை, வசந்த மண்டபப் பூசை என்பன நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதி வலம் வருதல் இடம்பெறும். அதன் பின்னர் நோன்புக் காப்பு வழங்கப்படும். நோன்புக் காப்பு எடுக்கும் அடியவர்கள் எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் பெயர், நட்சத்திரங்களை பதிவுசெய்து கொள்ளுமாறு ஆலய முதன்மைக் குரு சிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள் அறிவித்துள்ளார். (ஐ)

# ஆசன எண்ணிக்கைக்கு ஏற்ப 4 ஆயிரம் பஸ்கள் சேவையில்

கொழும்பு.ஓக.11

ஆசன எண்ணிக்கைக்கு ஏற்ப, பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடியவாறு, நான்காயிரம் பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்று இலங்கை போக்குவரத்துச் சபையின் பிரதிப் பொது முகாமையாளர் பண்டுக்க சுவர்னசிங்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை தனியார் பஸ் ஆசனங்களின் எண்ணிக்கையில் 50 வீதமான ஆசனங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவுக்கு பயணிகளை ஏற்றிச் செல்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரட்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன் 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் தடுப்பூசி பெற்றிருக்காவிடில் பஸ்களில் பயணிக்க முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டவிரோத மீன்பிடி அதிகரிப்பு

## மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு,ஓக.11

முல்லைத்தீவு கடற்பரப்புக்குள் திருகோணமலையிலிருந்து பெருமளவான மீனவர்கள் அத்துமீறி தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர் என்று முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் மரியராசா பிறெட்ரிக் ஜோன்சன் தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,


இவ்வாறு முல்லைத்தீவில் தொடர்கின்ற வெளிமாவட்ட கடற்றொழிலாளர்களின் அத்துமீறிய தொழில் நடவடிக்கைகள் தொடர்பாக கடற்றொழில் அமைச்சருக்கு அறிவித்து இருக்கின்றோம்.

வெளி மாவட்ட கடற்றொழிலாளர்களின் சட்டவிரோத மீன்பிடியை கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு [illegible] உள்ளது.

கடந்த ஒரு [illegible] முல்லைத்தீவு கடற்பரப்பில் வெளி மாவட்ட கடற்றொழிலாளர்களின் அத்துமீறிய மீன்பிடி அதிகரித்துக் காணப்படுகின்றது.

கடந்த பத்தாண்டுகளாக முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் ஒரு கட்டத்தில் இந்திய றோலர்களால் நெருக்கடியை எதிர்கொண்டனர். பின்பு அனுமதியற்ற முறையில் 400 வரையான கடற்றொழிலாளர்கள் நாயாற்றுப் பகுதியில் வாடிகளை அமைத்து தொழில் புரிகின்றனர். தற்போது திருகோணமலை; பக்கம் இருந்து பெருமளவு கடற்றொழிலாளர்கள் அத்துமீறிய தொழிலில் ஈடுபடுகின்றனர். இதனால் முல்லைத்தீவு கடற்றொழிலாளர்களின் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது- என்றார். (ஐ-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒலிம்பிக்கில் கிரிக்கெட்?

## ஐ.சி.சி கடும் முயற்சி

லண்டன், ஓக.11

ஒலிம்பிக் போட்டியில் கிரிக்கெட் விளையாட்டைச் சேர்த்துக்கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் (ஐ.சி.சி) அறிவித்துள்ளது.

ஜப்பானில் நடைபெற்று வந்த ரோக்கியோ ஒலிம்பிக் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமையுடன் நிறை வடைந்தது. அடுத்த ஒலிம்பிக் போட்டி 2024 இல் பிரான்ஸ் தலைநகர் பரிஸிலும் 2028 இல் ஒலிம்பிக் போட்டி அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸிலும் நடைபெறவுள்ளன.

இந்தநிலையில் லொஸ் ஏஞ்சல்ஸில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டியில் கிரிக்கெட் விளையாட்டை யும் சேர்த்துகொள்ள முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக ஐ.சி.சி அறிவித்துள்ளது. இதுபற்றி ஐசிசி தலைவர் கிரேக் பார்கிலே கூறுகையில்: "அமெரிக்காவில் 30 மில்லியன் கிரிக்கெட் ரசிகர்கள் உள்ளார்கள். இதனால் அந்தப் போட்டியில் கிரிக்கெட்டையும் இணைப்பது பொருத்தமாக இருக்கும். ஆனால் இது அவ்வளவு எளிதல்ல. ஒலிம்பிக் போட்டியில் பல அற்புதமான விளையாட்டுக்களை இணைத்துக் கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும் கிரிக்கெட்டைச் சேர்க்க இதுவே சரியான நேரம். ஒலிம்பிக்ஸும் கிரிக்கெட்டும் நல்ல கூட்டணியாக அமையும் "என்றார். இதற்கு முன்பு 1900 இல் பரிஸ் ஒலிம்பிக் போட்டியில் மட்டுமே கிரிக்கெட் போட்டி இணைக்கப்பட்டிருந்தது. அதிலும் இங்கிலாந்தும் பிரான்ஸும் மட்டும் விளையாடின. இதனால் 128 வருடங்களுக்குப் பிறகு ஒலிம்பிக் போட்டியில் கிரிக்கெட் விளையாட்டை மீண்டும் சேர்க்க ஐ.சி.சி முயற்சி மேற்கொண்டு வருகிறது. அடுத்த வருடம் பிர்மிங்கமில் நடைபெறவுள்ள 2022 பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில் கிரிக்கெட் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)




# ஆஸிக்கு மரண அடி; பங்களாதேஷ் வெற்றி!

டாக்கா, ஓக.11

**பங்களாதேஷின், மிர்பூர் விளையாட்டரங்கில் நேற்று முன் தினம் நடைபெற்ற ரி- 20 கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலியாவை மிகக் குறைந்த மொத்த எண்ணிக்கைக்கு ஆட்டமிழக்கச் செய்த பங்களாதேஷ் அணி , 5 போட்டிகள் கொண்ட தொடரை 4: 1 என கைப்பற்றியது.**

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 122 ஓட்டங்களைப் பெற்றது.

மொஹம்மத் நய்ம் 23 ஓட்டங்களையும் மஹ்முதுல்லாஹ் 19 ஓட்டங்களையும் அதிகப்பட்சமாக பெற்றனர். பங்களாதேஷுக்கு உதிரிகளாக 18 ஓட்டங்கள் கிடைத்தன. அவுஸ்திரேலிய அணி சார்பில் பந்துவீச்சில் நெதன் எலிஸ் 16 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் டான் கிறிஸ்டியன் 17 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். 123 ஓட்டங்கள் என்ற மிகச்சுலபமான இந்த இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா, 13.4 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 62 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. 7 ஆவது ஓவரில் 2 விக்கெட்களை மாத்திரம் இழந்து 38 ஓட்டங்களைப் பெற்று பலமான நிலையில் இருந்த அவுஸ்திரேலியா, அதன் பின்னர் 24 ஓட்டங்களை எடுப்பதற்குள் எஞ்சிய 8 விக்கெட்களையும் இழந்து படுதோல்வியைத் தழுவியது.

துடுப்பாட்டத்தில் மெத்யூ வேட் 22 ஓட்டங்களையும், பென் மெக்டர்மட் 17 ஓட்டங்களையும் பெற்றனர். பங்களாதேஷ் அணி சார்பாக பந்துவீச்சில் சிரேஷ்ட வீரர் ஷகிப் அல் ஹசன் ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட 3.4 ஓவர்கள் பந்துவீசி 9 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும் மொஹம்மத் சய்புதின் 3 ஓவர்களில் 12 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் நாசும் அஹ்மத் 8 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். ஆட்ட நாயகனவும், தொடர் நாயகனாகவும் ஷகிப் அல் ஹசன்தெரிவானார். (அ)




# நியூசிலாந்து அணியில் திலான் சமரவீர!

கொழும்பு, ஓக.11

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் திலான் சமரவீர நியூசிலாந்து பயிற்சியாளர் குழுவில் நியமிக்கப்பட்டுள்ளார்.

பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தானில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள ரி- 20 மற்றும் ஒருநாள் தொடருக்காகவே அவர் நியமிக்கப்பட்டுள்ளார். ஆசிய மைதானங்களின் தன்மைக்கேற்ப நியூசிலாந்து வீரர்களின் துடுப்பாட்டத்தில் செய்ய வேண்டிய மாற்றங்கள், வியூகங்கள் தொடர்பில் திலான் சமரவீர ஆலோசனை வழங்கவுள்ளார் என்று நியூசிலாந்து கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. (அ)



# ரோக்கியோ ஒலிம்பிக்: 458 பேருக்கு கொரோனா

ரோக்கியோ , ஓக.11

ரோக்கியோ ஒலிம்பிக்குடன் சம்பந்தப்பட்ட 458 நபர்கள் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்பதை அமைப்பாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். அவற்றுள் 28 புதிய கொவிட் தொற்றாளர்கள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 13 பேர் ஒப்பந்தக்காரர்கள். ஆறு பேர் விளையாட்டுகள் சம்பந்தப்பட்ட பணியாளர்கள், மேலும் ஆறு பேர் தன்னார்வலர்கள் மற்றும் இருவர் ரோக்கியோ ஒலிம்பிக் ஊழியர்கள் ஆவர். இவ்வாறு புதிதாக அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களில் 21 பேர் ஜப்பானில் வசிப்பவர்கள். 32 ஆவது ஒலிம்பிக் விளையாட்டுகள் தொடங்கியதில் இருந்து, 29 விளையாட்டு வீரர்கள் உட்பட மொத்தம் 458 பேர் வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவற்றுள் ஜப்பானில் வசிப்பவர்கள் 307 பேர். மொத்தம் 115 விளையாட்டுகளுடன் இணைக்கப்பட்ட அதிகாரிக்கும் கொரோனாத் தொற்று பதிவாகியுள்ளது. அதே நேரத்தில் 249 தொற்றாளர்கள் ஒப்பந்ததாரர்கள், 12 ஊழியர்கள் மற்றும் 27 தன்னார்வலர்கள். அது தவிர ஊடகத்துறையைச் சேர்ந்த 26 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். உலகளாவிய சுகாதார நெருக்கடி இருந்தபோதிலும், ஜப்பான் வெற்றிகரமாக ரோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளை நடத்தி முடித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# முடிந்தது கதை!

ஒக்லாண்ட், ஓக.11

நியூசிலாந்து ரி- 20 அணியில் இடம்பெறாத காரணத்தால் தன்னுடைய சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கை முடிவுக்கு வந்து விட்டதாக அதிரடி வீரர் கொலின் மன்றோ தனது வேதனையை வெளிப்படுத்தியுள்ளார்.

ரி- 20 உலகக் கிண்ணத் தொடரில் விளையாடவுள்ள நியூசிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. கேன் வில்லியம்சன் தலைமையிலான இந்த அணியில் மூத்த வீரர் ரோஸ் ரெய்லர், அதிரடி வீரர் கொலின் மன்றோ, கொலின் டி கிராண்ட் ஹோம், ஃபின் ஆலன் ஆகியோர் அணியில் இடம்பெறவில்லை.

இதனால், "ரி- 20 உலகக் கிண்ண அணியில் இடம்பெற எண்ணினேன். வாய்ப்பு கிடைக்காததில் வேதனையில் உள்ளேன். நியூசிலாந்து அணிக்காக என்னுடைய கடைசி ஆட்டத்தை விளையாடி விட்டதாக நினைக்கிறேன்" என்று இன்ஸ்டகிராமில் மன்றோ கூறியுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி: news@uthayan.com விளம்பரம்: advert@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11. 08.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.